# கல்வெட்டு



தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையின் காலாண்டு இதழ்
17 ★ காளயுக்தி ஆண்டு சித்திரைத் திங்கள் ★ விலை

அட்டையில் :

உமையுடன் ‘நரை வெள்ளேறு ஒன்றுடையான்

வேலஞ்சேரி, செங்கற்பட்டு மாவட்டம், கி.பி. 10-ஆம் நூற்றாண்டு.

# அடிமை விற்பனையைக் குறிக்கும் ஆள் ஓலைகள்

ச. கிருஷ்ணமூர்த்தி
தொல்பொருள் அலுவலர், தஞ்சாவூர்

தஞ்சை மாவட்டம் சீர்காழி நகரில் திரு. பாலசுப்பிரமண்ய முதலியார் குடும்பத்தில் முத்திரை பதிப்பிக்கப்பட்ட பத்திர ஓலைகளை ஆய்வு செய்தபோது ஆளடிமைச்சாசன ஓலைகள் மூன்று கண்டுபிடிக்கப் பட்டன. 18-ஆம் நூற்றாண்டின் இறுதியில் எழுதப்பட்டதாகத் தோன்றும் இந்த ஓலைகளில் அடிமைகள் விலைக்கு விற்கப்பட்ட செய்தி காணப்படுகிறது.

இந்த ஓலைகளில் விஜயநகர மெய்க்கீர்த்திப் பகுதியான "ஸ்ரீமன் மகாமண்டேஸ்வரன் பாஷைக்குத் தப்புவராய கண்டன்" முதலிய தொடர்கள் தொடக்கப் பகுதியாக அமைகின்றன. ஓர் ஓலை கிருஷ்ண தேவ மகாராயர் ஆட்சிக் காலத்திலும், மற்றொரு ஓலை இராமதேவ மகா ராயர் காலத்திலும் நிகழ்ந்த அடிமை விற்பனைகளைத் தெரியப்படுத்து கின்றன. 'சாலிவாகன சகாற்த்தம்' என்ற தொடருக்குப் பின்னர் ஆண்டு குறிக்கப் படவேண்டிய இடம் வெறுமையாக விடப்பட்டுள்ளது. இந்த வெற்றிடத்தையடுத்து விளம்பி வருடம் சித்திரை மீ 6-ஆம் தேதி ஒரு ஓலையிலும், விளம்பி வருடம் ஆடி மாதம் 27-ஆம் தேதி மற்றொரு ஓலையிலும் குறிப்பிடப் பட்டுள்ளன. மூன்றாவது ஓலை நள வருடம் தை மாதம் 24-ம் தேதி என்ற குறிப்புடன் தொடங்குகிறது. விஜயநகர மன்னர்களின் மெய்க்கீர்த்தி இவ்வோலையில் இல்லை.

மூன்று ஓலைகளிலும் உள்ள தமிழ் எழுத்துக்களின் எழுத்தமைதி 18-ஆம் நூற்றாண்டாக அமைகிறது. எனவே முன்னர் இருந்த ஓலைகளிலிருந்து பிரதி செய்ததாக இவை இருக்கலாம். ஆண்டு குறிக்கப் படவேண்டிய இடம் வெறுமையாக உள்ளதை நம் சிந்தையில் கொள்ள வேண்டுவதாகும். பரம்பரையாக ஒரு குடும்பத்தினர் வசம் அடிமை யாகயிருப்பவர்களைப் பற்றி இந்த ஓலைகள் கூறுகின்றன. திரு. பால சுப்பிரமண்ய முதலியார் என்பவரின் முன்னோர்கள், தொண்டை மண்டலத்து குன்றத்தூரிலிருந்து குடிபெயர்ந்தவர்களாவர்[1] எந்த ஆண்டில் சீர்காழிக்கு குடிபெயர்ந்தனா என்பது சரியாகத் தெரிய வில்லை. ஆயினும் கி.பி. 1776 முதல், திரு. பாலசுப்பிரமண்ய முதலியார் முன்னோர்கள் நிலம் வாங்கியது, விற்றது குறித்த பத்திர ஓலைகள் உள்ளதால் அதற்கு முன்பே குடி பெயர்ந்திருக்கவேண்டு மென்பது உறுதியாகிறது.

முதலியார்-படையாச்சி-நாயக்கர் ஆகிய இனத்தவர் அடிமைகளை வைத்துக் கொள்ளுமளவிற்கு உயர்ந்தவர்களாக இருந்திருக்கின்றனர்.

முதலாம் ஓலையில் தியாகராச முதலியார் பறையன் சந்தோச மகன் ராயனை மத்தியஸ்தர் முன்னிலையில் சுப்பிரமணியமுதலியாருக்கு கோபாலச் சக்கரம் குளிகை பத்துக்கு விற்பனை செய்தது குறிக்கப் பட்டுள்ளது.

இரண்டாம் ஓலையில் ரெட்டி கடலங்குடியிலிருக்கும் ராமச்சந்திர நாயகர் தம் அடிமைகளான முத்தன், மற்றொருவன் வெளிச்சான், அவன் பெண்சாதி பார்வதி ஆகிய நால்வரையும் கோபால சக்கரம் குளிகை பதினாலு பொன்னுக்கு குண்ணமருதூர் மாகாணம் மங்கநல்லூரிலிருக்கும் சுப்பிரமண்ய முதலியாருக்கு விற்ற செய்தி காணப்படுகிறது.

மூன்றாம் ஓலையில் கஞ்சா நகரத்தில் வாழ்ந்த அப்பாச்சி முதலியாருக்கு சுப்பா படையாச்சி தம்மிடம் இருந்த அடிமைகள் ராமன், ராமன் மனைவி முக்கட்டை, இவர்கள் பிள்ளைகள் ஆகியோரை எண்பது பொன்னுக்கு விற்ற செய்தி எழுதப்பட்டுள்ளது.

சோழர்கள் காலத்தில் பெருமானிடம், ஒருவன் தாமே அடிமையாக விற்றுக்கொண்டதை வேதாரண்யம் கோயில் கல்வெட்டில் காண்கிறோம். ஆடல், பாடல் நிகழ்த்திய தளிப் பெண்டுகள் தேவரடியாராக-தேவதாசியாக இருந்திருந்தாலும் சில உரிமைகளைப் பெற்றிருந்தனர். ஆனால் சீர்காழியில் கிடைத்த ஓலைகளில் காணப்பெறும் அடிமைகள் எவ்வித உரிமையையும் பெற்றிருக்கவில்லை. அடிமைகள் வழக்கு பற்றி சுந்தரர் வரலாற்றில் பார்க்கிறோம். மூல ஓலை-படி ஓலை ஆகியவை இருந்ததையும், அடிமையின் கையெழுத்து இருந்ததையும் பெரிய புராணம் குறிப்பிடுகிறது.[2]

நமக்குக் கிடைத்திருக்கும் மூன்று ஓலைகளும் படி எடுத்த ஓலைகளாகும். அடிமையின் கையெழுத்து-சாட்சிகளின் கையெழுத்து-எழுதுபவனின் நெட்டெழுத்து ஆகியவைகளைப் பார்க்கிறோம். அடிமையை 'விலைக்கு வாங்குவார் உளரோ' என்று விற்பவன் ஏலம் போட வாங்குபவன் 'கொள்வோம் கொள்வோம்' என்று முன் வருகிறான். சோழர் காலத்தில் நிலத்தை விற்கும்போது நிலவிய இந்த ஏலமுறை[3] தொடர்ந்து வந்தமையை இவ்வோலைகளால் அறிகிறோம் மந்தியஸ்தர் முன்பாக விலை நிர்ணயம் செய்கின்றனர். எல்லா ஓலைகளிலும் 'கோபாலச் சக்கரம் குளிகை' என்ற பொன் நாணயம் குறிக்கப்படுகிறது[4]. சீர்காழி-கஞ்சாநகரம் கடலங்குடி ஆகிய இடங்களில் இக்காசு பயன் படுத்தப்பட்டுள்ளது[5]. திருக்கடவூர் செப்புத்தகட்டில்[6] குறிக்கப்படும் 'நற்சத்திரக்குளிகை'க் காசும் (Star pagoda), இக்காசும் ஒன்றுதானா என்பது ஆராயத் தக்க ஒன்று.

ஒரு ஓலையில் அடிமையின் விலை 10 பொற் காசாகவும், மற்றொரு ஓலையில் நான்கு அடிமைகளின் விலை 14 காசாகவும்; நள வருடத்தில் எழுதப்பட்ட மூன்றாம் ஓலையில் நான்கு அடிமைகளின் விலை 80 பொற் காசாகவும் இருந்துள்ளதை அறிகிறோம்.[7]

பிற்காலத்தில் ஐரோப்பியர்களின் வருகையால் அடிமைகளின் விலை கூடி விட்டது போலும். கல்வியறிவில்லா அடிமைகளின் கையெழுத்திற்காகக் கீறல் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆண்கள் மட்டு மின்றி பெண்களின் பெயருக்காகவும் கீறல் இடப்பட்டுள்ளது. கல்வெட்டுக்களின் இறுதிப் பகுதி போல் 'கல்லும் காவேரியும், பில்லும் பூமியும் உள்ள மட்டில் ஆண்டு அனுப்பிச்சுக் கொண்டு' என வந்துள்ளது.

மேற்கூறிய மூன்று அடிமைச் சாசன ஓலைகளையும், தொல் பொருள் ஆய்வுத்துறைக்கு வழங்கிய திரு. பாலசுப்பிரமணிய முதலியாருக்கு என் நன்றிகள் உரித்தாகுக.

## முதல் ஓலை

1 ஸ்ரீமகா மண்டலேசுபரன் அரியதளவிபாடன் பாஷைக்குத் தப்புவராய கண்டன், கண்ட நாடு கொண்டு கொண்ட ஞடு கொடாதான் சமுத்திராதிபதி கோ . .

2 திக்காளுமை கோகுலவங்கிஷாதிபதி ஆக்கிஞா சுக்கிரீபன் அசு வந்த குலசேகரன் நவகோடி ஞாராயணன் ரத கெச துரக பதாதியுடைய சாம்ருத்தி வல்லவன் சகல . .

3 சத்திய வாசகன், துலுக்கர் கொட்டங் தவிழ்த்தான் துலுக்கர் மோகங் தவிழ்த்தான் ஒட்டிய தளவிபாட்டன் யிம்மண்டல முங்கொண்டு யீழுந்திறை கொண்ட ராசாதிராசன் ராச பர[மே] . .

4 ராசமார்த்தாண்டன், ராசகெம்பீரன், அடலரசர் குலேகாரன் இளவரசர் மணவாளன், ஒட்டியர் மோகந்தவிழ்த்தான் துஷ்ட்ட பரிகுலன் சிஷ்ட்ட பரிபாலன், நரபதி, கெசபதி, அசுபதி, தனபதியான் . .

5 ராயன் பூச்சக்கிற தேவமகாராய வீரப்பிறதாப மகாராய வீரநரசிங்க மகாராயர் வாமதேவ மகாராயர் வல்லாள தேவமகாராயர் வீரவசந்தராயர் கிருஷ்ணராயர் மகாராயர் யிராமதேவமகாராயர் . . . .

6 பண்ணி அருளாவின நின்ற சாலிவாகன சகாத்தம் யிதின் மேல்ச் செல்லா நின்ற விளம்பிஙூ ஆடிமீ௨ ௨௨ திரவாரம் அவிட்ட நஷ்ஷத்திரமும் பவுர்ணமியும் கூடிய சுபதினத்தில் ராசாதி ராசன் ராசவ . . . .

7 கொள்ளடத்துக்குத் தெற்குக் காவேரிக்கு வடக்கு உபைய காவேரி மத்தியில் திருப்பனந்தாள்ச் சீமைச் சோழம் பெடண மாகாணம் ரெட்டி கடலங்குடியிலிருக்கும் காவெட்டிவெங்குள . . . . . .

8 சீமை குண்ண மருதூர் மாகாணம் மங்கை நல்லூரிலிருக்கும் சுப்பிரமணிய முதலியார் அவர்களுக்கு அடுமை சாதன முறி கொடுத்தபடி யென்னுதான பறையன் றி......

9 முத்தான்–யிந்த மூணு ஆளும் வெளிச்சான் பெண்சாதி பார்வதியும் யிந்த னூலு செனத்தையும் மங்கை நல்லூரில் ஆவணக் களரி யேத்தி கொள்வாருளரோ கொள்வாருள் ரோ (வென் று)......

10 பிற்கூறி கொள்வோ மென் று யெம்மிலுமிசைந்து யெதிர் மொழி மொழிந்து னூலு மத்திஸத்தாள் முன்பாக விலே நிற்ணயம் பண்ணினது கோபால சக்கரம் குளிகை ௯௰௪- இந்தப் பதினூலு பொன்னும்...

11 ருளப் பத்திக் கொண்டது விபரம்படியினுலே யிந்தப் பறைய னுக்கு யாதொரு கலனுமில்லே கலனுளதாயித் தோன்றி னுல் னனே கலன் தீத்து துடர்ச்சியை நீக்கி ஆஷ்ஷி செலுத்தித் தரக் கடவேனுகவும் யிந்தபடி சம்மதித்து...

12 சுப்பிறமணிய முதலியார் அவர்களுக்கு ரெட்டி கடலங்குடியி லிருக்கும் ராமச்சந்திரனயகர் ஆள் அடுமை சாசனம் பண் ணிக் குடுத்தேன் யிந்தச் சாசனத்துக்கு ஏட்டுக் குத்தம், எழுத்தாணிக்குத்தம், வரிபிசகு, புள்ளடி ெரிசல் குற்ெ . . கடவதாகவும் யிவர்கள் சொல்ல சாதனம் எழுதினது வேங்கடபதி ெட்டெழுத்து இந்த படி அறிவேன் தியாகராசன் இந்தபடி ராமபத்திரன் உபாதிசாமி அயன் -யிந்தக்கிறல் பார்வதி-யிந்தக் கிறல் சாசி-ராமசந்திரன்[8] யிந்தக் கையி எழுத்து ராமச்சந்திரனயகர்

## இரண்டாம் ஒலே

1 ஸ்ரீமன் மகாமண்டலேசுரன், பாண்டிக்கித் தப்புவராய கண்டன் மூவராய கண்டன், கண்டநாடு கொண்டு கொண்டநாடு குடாதான் இம்மண்டலமும் யீழமும் திறை கொண்ட

2 ருளிய ராசாதிராசன், ராசமாற்த்தாண்டன், பிறபுடை தேவமகாராயர் கிஷ்ணதேவமகாராயர் செல்லா நின்ற சாலீவாகன சகாற்த்தம் . . . . . செல்லா நின்ற விளம்பினூ

3 சித்திரை மீ ௬௨ சீகாழி சீமை குண்ண மருதூர் மாகாணம் மங்கநல்லூரிலிருக்கும் சீகாழி சுப்பிரமணிய முதலியார் அவர்களுக்கு ஷேமங்கநல்லூரிலிருக்கும் தியாகராச முதலியார்

4 பறையன் பேரில் அடுமைசாதனம் பண்ணி குடுத்தபடி யென்னுதான பறையன் சந்தோசி மகன் ராயனை கொள் வார் கொள்ளுவார் யென்று ஞன் முற் கூற கொள்வோம் கொள்வோம்

5 யென்று பிற்கூறி மத்திஷ்சாள் கூடி நிஷ்சயம் பண்ணினது கோபாலசக்கரம் குளிகை ஒ௰ இந்தப் பத்துப் பொன்னும் அங்கடி பார்வையாக ஒரு கிழிபட ஞன் பத்திக் கொண்ட படியிஞலே புத்திர

6 பவுத்திர பாரம்பரையம் சந்திர சூரியாள் உள்ள மட்டும் கல்லும் காவேரியும், பில்லும் பூமியும் உள்ள மட்டும் ஆண்டு அனுபவிச்சுக் கொண்டு யெப்பறப்பட்ட தொழிலும்

7 செய்விச்சுக் கொண்டு சுகத்திலே ஆண்டு அனுபவிச்சுக் கொள்வராகவும் இந்தபடி சம்மதித்து சுப்பிறமணிய முதலியார் அவர்களுக்கு தியாகராாச முதலியார் சாதனம் பண்ணி குடுத்தேன்

8 இந்த ராயன் பேரில் யாதொரு கலனும் இல்லை கலனுகள் உண்டாஞல் அது நானே தீத்து தருவேஞகவும் இந்த சாதன முறி யெழுதின நன்மைக்கு மங்கநல்லூர் ராமபத்திரன்

9 னெட்டெழுத்து இந்தபடி தியாகராாசன்

## மூன்ரும் ஒலை

1 நள ஹூ தையிமீ 24உ குருவாரமும் பூறுவ பஷ்சமும் ரேபதி நஷ்செத்திரமும் சஷ்ட்டியும் கூடின சுபதினத்தில் சீகாழிச் சீமை குண்ண மருதூர் மாகாணம் கஞ்சா நகரம்

2 வடபாதியிலிருக்கும் அப்பாச்சி முதலியார் அவர்களுக்கு திவிச் சீமை அட்டாங்கிசத்திலிருக்கும் சுப்பா படையாச்சி பறையன் பேரில் அடுமை சாதனம் பண்ணிக் குடுத்தபடி

3 யென்னுதான பறையன் மகன் ராமன் அவன் பெண்டாட்டி முக்கட்டை அவன் பிள்ளையள் இவாளை அடங்கலும் கொள்வார் கொள்ளுவார் யென்று ஞன் முற்கூற

4 கொள்வோம் கொள்வோம் யென்று பிற்கூறி மத்திஷத்தாள் கூடி நிஷ்சயம் பண்ணினது கோபால சக்கிரம் சுழி ஒஅம் இந்த யெண்பது பொன்னும் அங்கடிப் பார்வையாக

5 ஒரு கிழிப்பட வடபாதி உதையப்பையன் ரெங்கய்யனவர்கள் முகாந்திரம் ஞன் பத்திக் கொண்ட படியிஞலே புத்திர பவுத்திர பாரம்பர்யம் சந்திராதித்தாள் உள்ள வரை க . .

6 கல்லும் காவேரியும், பில்லும் பூமியும் உள்ள வரைக்கும் ஆண்டு அனுபவிச்சுக் கொண்டு யெப்பேற்ப்பட்ட தொழிலும் செய்விச்சுக் கொண்டு சுகத்திலே ஆண்டு அனுபவிச்சுக் கொ[ள்]

7 வராகவும் இந்தப்படி சம்மதித்து அப்பாச்சி முதலியார் அவர்களுக்கு சுப்பா படையாச்சி சாதனம் பண்ணிக் குடுத்தேன் இந்த ராமன் பேரில் யாதொரு கலனும் இல்லை

8 கலனுளதாகில் அது னானே தீத்துத் தருவேனாகவும் இந்தச் சாதன முறி எழுதின நன்மைக்கி

9 ஊர்க் கணக்கு அய்யன் யிந்த படிக்கி சுப்பா படையாச்சி கயி எழுத்து

10 சாட்சி ரெங்கய்யன்

11 சாட்சி உதையபயன்

---

அடிக்குறிப்பு :

1 அடிமைச் சாசன ஓலைகளை வழங்கிய திரு. பாலசுப்பிரமணியர், இவர் ஒன்றுவிட்ட தமையனார் அருணாசலம் ஆகிய இருவரும் சீர்காழியில் மிகுந்த சொத்துக்களையுடையவர்களாக உள்ளனர். ஆண்டு தோறும் சேக்கிழார் திருவிழா நடத்துகின்றனர்.

2 பெரிய புராணம் தடுத்தாட்கொண்ட புராணத்தில், இறைவன் கிழவேதியர் வடிவில் சுந்தரரை அடிமையாக ஏற்றுக் கொண்டதையும், மத்தியஸ்தர் - ஆவணச் சாட்சி-படிஓலை - மூலஓலை ஆகிய செய்திகளையும் விளக்கமாகப் பார்க்கிறோம்.

3 கோயிலுக்கு வருமானம் குறைந்த நேரத்தில் கோயில் நிலத்தை விற்கும்போது ஏலம் போடுவதையும் அதனை ஒருவன் வாங்குவதையும் திருவோத்தூர் முதலான ஊர்களின் கல்வெட்டுக்களில் காண முடிகிறது.

4 பிற்காலக் கல்வெட்டுகளில் 'கண்ட கோபாலன் மாடை' என்னும் ஒரு காசு குறிக்கப்படுகிறது. அதற்கும் இந்நாணயத்துக்கும் தொடர்பு இருக்கலாமோ என்ற ஐயம் எழுகிறது.

5 ஓலைகளில் குறிக்கப்படும் கடலங்குடி, கஞ்சா நகரம், மங்கநல்லூர் ஆகிய ஊர்கள் இன்னமும் அதே பெயரில் சீர்காழிக்கு அருகில் மாயவரம் வட்டத்தில் உள்ளன. சீர்காழி மாகாணமாக இருந்துள்ளது. திரு. பாலசுப்பிரமண்ய முதலியாரின் முன்னோர் கஞ்சா நகரத்திலும் குடியிருந்தனர் என்பதைத் திரு. பாலசுப்பிரமண்யம் என்னிடம் குறிப்பிட்டார். இவருடைய நிலங்கள் இன்றும் அங்கு உள்ளன.

6 திருக்கடவூர் தியாகப்பசெட்டியாரிடம் உள்ள செப்பேட்டில் "அன்றாடகன் வழங்கும் வாசிபடா நற்சத்திரங்குளிகை" என்னும் காசு குறிக்கப்படுகிறது. இந்தக் காசும் அடிமை ஓலைகளில் வரும் கோபால சக்கரக் குளிகையும் ஒரே காசா? தெரியவில்லை.

7 ஓலை இரண்டில் நான்கு அடிமைகள் விலை 14 பொன்னாக இருக்க மூன்றும் ஓலை அடிமைகளின் விலையை 80 பொன் என்பதால் பணத்தின் மதிப்பு குறைந்திருக்கலாம்.

8 சாட்சி-ராமசந்திரன்

9 பாஷைக்குத் தப்புவராய என்று இருத்தல் வேண்டும்.

---

## தென்னக மாநிலங்களின் கலாச்சார ஒற்றுமைக் காட்சி

தமிழகமும் மற்ற தென்னக மாநிலங்களான ஆந்திரம், கருநாடகம், கேரளம், மகாராஷ்டிரம் ஆகியவையும் கலாசாரத் தொடர்புடையவை என்பதை யாவரும் அறிவர். தொல்பொருள் கண்டு பிடிப்புகளால் அவ்வொற்றுமை மேலும் உறுதிப்படுவதைப் பொது மக்களும் அறியும் வண்ணம் தமிழ்நாடு, ஆந்திரம், கருநாடகம், மகா ராஷ்டிரம் ஆகிய மாநிலங்களில் அண்மைக் காலத்தில் கண்டுபிடிக்கப் பெற்ற தொல்பொருள்கள் அடங்கிய ஒரு காட்சியை நான்கு மாநிலங் களின் தொல்பொருள் ஆய்வுத்துறைகளும் சென்னையில் அமைத்தன.

இக்காட்சியையும், ஆசிரியப் பெருமக்கட்கு ஓலைச்சுவடிப் பயிற்சி யையும் தமிழ்நாடு அரசு சட்டமன்ற மேலவைத் தலைவர் மாண்புமிகு டாக்டர் ம. பொ. சிவஞானம் அவர்கள் தலைமையில், தமிழ் நாடு அரசு கல்வி அமைச்சர் மாண்புமிகு செ. அரங்கநாயகம் அவர்கள் 15-10-79 அன்று துவக்கி வைத்தார்கள்.

ஒவ்வொரு மாநிலமும் அகழ்வாய்வில் கண்டெடுக்கப்பட்ட முது மக்கட் தாழிகள், சுடுமண்பொம்மைகள், பஞ்சமுக வாத்தியம், கல் வெட்டுகள், ஓலைச்சுவடிகள், செப்புத் திருமேனிகள், வண்ண ஓவி யங்கள் ஆகியவைகளைக் காட்சியில் வைத்திருந்தன.

தமிழ்நாட்டில் காணப்பெறும் பஞ்சமுக வாத்தியத்துக்கும் கருநாடக மாநிலத்தில் அகழ்வாய்வில் கண்டெடுக்கப்பட்டுள்ள மண் ணால் செய்யப் பட்டுள்ள பஞ்சமுக வாத்தியத்துக்கும் மிகுந்த ஒற்றுமை இருப்பதையும், தமிழ்நாட்டில் உள்ள சக்கராயி வழிபாட்டுக்கும், ஆந்திர, கருநாடக மாநிலங்களில் நிலவும் லஜ்ஜையம்மன் வழிபாட்டுக் கும் அத்தெய்வங்களுக்குமுள்ள ஒற்றுமையையும் பொதுமக்கள் கண்டு பெரிதும் வியந்தனர்.

இக்காட்சியைக் கல்லூரி, பள்ளி மாணவ மாணவியர் பெருந் திரளாக வந்து கண்ணுற்று குறிப்புகள் எழுதிச் சென்றனர். தென்னக மாநிலங்களின் கலாச்சார ஒற்றுமையை அறிய விரும்பிய மாந்தர்க்கு இக்காட்சி பெரிதும் பயனுடையதாக அமைந்தது.

சென்னையை அடுத்து, மதுரையிலும் இக்காட்சி அமைக்கப் பெற்றது.

★

# பெரிய குறுக்கை அகரம்

அ. அப்துல் மஜீத்
பதிவு அலுவலர், திருச்சி

பெரிய குறுக்கை அகரம்: இவ்வூர் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் பெரம்பலூர் வட்டத்தில், திருச்சியிலிருந்து 40 கிலோ மீட்டர் தொலைவிலுள்ளது. இங்கு மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயமும், லக்ஷ்மி நாராயணப் பெருமாள் ஆலயமும், ஐயனார் ஆலயமும் உள்ளன. மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயமும், ஐயனார் ஆலயமும் வழிபாட்டிலுள்ளன. லக்ஷ்மி நாராயணப் பெருமாள் ஆலயம் மிகவும் அழிந்த நிலையில் மண் மேடிட்டு காட்சி தருகிறது. அம் மண்மேட்டில் புதைந்துக்கிடந்த ஒரு செவ்வக வடிவமுள்ள கல்லில் கீழே தரப்பட்டுள்ள கல்வெட்டு வாசகம் காணப்படுகிறது. கல்வெட்டு வாசகத்தின் கீழ் குறுவாளின் உருவமும், பிறையின் உருவமும் பொறிக்கப்பட்டுள்ளன.

**கல்வெட்டு :**

1 ஸ்வஸ்தி ஸ்ரீ
2 குறுக்கைத்
3 திருச்சிற்றம்ப
4 லச் சதுவே-
5 தி மங்கலத்
6 துத் திருமுற்ற
7 ங்களும் இந்
8 த அகரமும் ஐ
9 ஞ்சு நாட்டு
10 ச் சுருதி மா
11 ந்கள் கா
12 வல்

கல்வெட்டில், இவ்வூர் குறுக்கைத் திருச்சிற்றம்பலத்துச் சதுர்வேதி மங்கலம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வூரிலிருந்த அகரமும் குறிப்பிடப் பெற்றுள்ளது. 'அகரம்' என்பது அக்ரஹாரம் என்பதின் திரிபு. இவ்வூரிலுள்ள கோயில்களையும் (திருமுற்றங்கள்) அகரத்தையும், ஐஞ்சு நாட்டு சுருதிமான்கள் காவல் புரிந்ததாக இக் கல்வெட்டு கூறுகிறது. இங்குள்ள மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்திலுள்ள மூன்றாம் இராஜராஜனின் 24-ஆம் ஆட்சியாண்டு (கி.பி. 1240), கல்வெட்டு இவ்வூரைக் 'குறுக்கைத் திருச்சிற்றம்பலத்து சதுர்வேதி மங்கல'மென குறிப்பிடுகிறது. இக்கல்வெட்டில் குறிப்பிடப்படும் சுருதிமான்களைப்

பற்றி மூன்ரும் குலோத்துங்க சோழனின் ஊற்றத்தூர் கல்வெட்டும் குறிப்பிடுகிறது. இவர்கள் இடங்கைப் பிரிவைச் சேர்ந்தவர்களாகவும், உழு தொழிலைச் செய்பவர்களாகவும் கல்வெட்டு கூறுகிறது.

“சுருதி மான்கள்” என்ற சொல்லுக்கு ஒரு குலத்திலுள்ள மூத்தவர்கள் அக்குலத்துத் தொடர்பான முக்கிய நடைமுறைகளைக் கண்காணிப்போர் என்றும், இச்சொல் தமிழிலுள்ள “கேள்வி” என்ற சொல்லிலிருந்து பின்பற்றப்பட்டதென்றும் பொருள் காணப்படுகிறது. இக் கல்வெட்டிலுள்ள எழுத்துக்களின் வரிவடிவங்கள் கி.பி. 13-ஆம் நூற்றுண்டைச் சேர்ந்ததாகத் தோற்றமளிக்கின்றன.

இவ்வூரில் இன்றும் சற்றேறக்குறைய நூற்றுக்கும் மேற்பட்ட சுருதி மான்களின் வழிவந்தோர் வாழ்கின்றனர். அவர்கள் தங்களை “சுதர் மான்கள்” என அழைத்துக் கொள்கின்றனர் சுருதிமான்கள் என்ற பெயர் நாளாவட்டத்தில் மாறி ‘சுதர்மான்கள்’ என்று வழக்கில் வந்துள்ளது போலும். இவர்கள் தற்பொழுது இங்குள்ள கிராம தேவதைகளுக்குரிய ஆலயங்களில் பூசாரிகளாகப் பணிபுரிந்து வருகின்றனர் இவர்களையணுகித் தாங்கள் எந்த இனப் பிரிவைச் சேர்ந்தவர்கள் என்று வினவியபொழுது, தாங்கள் “மூப்பனுர்” வகுப்பில் ஒரு பிரிவைச் சேர்ந்தவர்களெனக் கூறினர். இ. தர்ஸ்ட்டன், ‘மூப்பனுர்’ வகுப்பைக் குறிப்பிடும்பொழுது, அவ்வகுப்பில் அளவன், அம்பலக்காரன், குடுமி, பள்ளன், பறையன், தண்டன், சேனைக்குடையன், சாலியன், சாணுன், “சுதர்மான்”, வலையன் என்ற பிரிவினர்களுள்ளனரென்று தம்முடைய “தென்னிந்திய குலங்களும் பழங்குடி மக்களும்” என்ற நூலில் தெரிவித்துள்ளார்.

பெரிய குறுக்கைக் கல்வெட்டின் கீழ் பொறிக்கப்பட்டுள்ள ‘குறுவாள்’ சுருதிமான்களின் வீரத்தினை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது என எண்ணத் தோன்றுகிறது. வாளின் அருகே பொறிக்கப்பட்டுள்ள “பிறை” அவர்கள் சந்திர குலத்தில் தோன்றியவர்கள் என்பதை வெளிப்படுத்தலாமெனக் கருதவும் வாய்ப்பேற்படுகிறது.

---

(11-ஆம் பக்கத் தொடர்ச்சி) . . . .

என்ற சோழ முத்தரையர் புதிதாக ஸ்ரீகைலாசத்து ஆள்வார் கோயில் கட்டினதாக அறிகிறோம். இது ஒரு வேளை இப்பொழுது விஜய மங்கை என்று கூறப்பட்டு கொள்ளிடத்தின் வடகரையில் உள்ள கோயிலாக இருக்குமோ? இதைப் பற்றி சரித்திர ஆசிரியர்கள் ஒரு முடிவு எடுக்க வேண்டும்.

இங்குள்ள ராஜேந்திர சோழன் காலத்து கல்வெட்டு இக் கோயில் மடை விளாகத்தில் திருத்தொண்டர்துகையாள் திருமடம் இருந்ததைக் கூறுகிறது. கண்டாபரணன் பெயரன் சிதம்பரத்தவராகிய சுப்ரமணிய சிவன் என்பான் இம்மடத்திற்கு சில நிலங்களை அளித்திருக்கிருர். இதன் வருமானம் இம்மடத்திற்கு வரும் யாத்திரிகர்களுக்கு உப்பும், ஆமணக்கு எண்ணையும் கொடுக்கவும், ஸ்தானத்தார் நோய் வாய்ப்படின் அவர்களுக்கு வைத்திய உதவி செய்யவும் பயன் படுத்தப்பெற்றது.

# திருவிஜயமங்கை

ஜி. சி. பட்டாபிராமன், B.A.

தேவாரப் பாடல் பெற்ற இந்த தலம் இன்று கும்பகோணத்திற்கு அருகில் கொள்ளிடத்து வடகரையில் உள்ள விஜயமங்கை என்ற சிற்றூரில் உள்ள விஜயநாதேஸ்வரர் கோயில் எனக் கூறுகிறார்கள். இதற்கு அருகில் திருஇன்னம்பர், திருவைகாவூர், திருப்புறம்பியம் முதலிய தேவாரத் தலங்கள் உள்ளன. இங்குள்ள கோவில் மிகச் சிறியது சிற்பங்கள் ஒன்றும் கிடையாது. ஆனால் தேவாரத் தலமாகிய திருவிஜய மங்கை, கொள்ளிடத்தின் தென் கரையில் உள்ள கோவிந்த புதூரில் உள்ள கங்காஜமேஸ்வரர் கோயில் என சரித்திர ஆசிரியர்கள் நினைக்கிறார்கள்.

கோவிந்தபுதூர் திருச்சி மாவட்டத்தில் உடையார் பாளையம் தாலுகாவில் உள்ளது. திருச்சி சிதம்பரம் - நெடும் சாலையில் கீழப் பழுவூரில் இருந்து விளாங்குடி வரையில் சென்று அங்கிருந்து விக்கிர மங்கலம் வழியாக 12 கல் சென்று இவ்வூரை அடைகிறோம். விக்கிர மங்கலத்திலுள்ள சோழீஸ்வரர் கோயில் பிற்காலச் சோழர்களால் கட்டப்பட்டது. சாலையில் ஜைனதீர்த்தங்கரர் சிலைகள் உள்ளன. விளாங்குடி வரையில் நல்ல சாலை. அதன் பிறகு 12 கல், சாலை சுமாராக உள்ளது. இவ்வூரிற்கு கோவிந்தபுதூர் என்றும், இக்கோவிலிற்கு விஜய மங்கை எனவும் பெயர். அப்பர் தம் தேவாரத்தில்,

“கொள்ளிடக்கரை கோவிந்தபுதூரில் வெள் விடைக்கு அருள் செய் விஜய மங்கை உள்ளிடத்து உறைகின்ற உருத்திரன்” என கூறுகிறார்

தேவாரத்தில் தளி என்று பெயர் கொண்ட பல ஸ்தலங்களைக் காண்கிறோம். இவ்வூரில் உள்ள கல்வெட்டுகள் விஜயமங்கை மஹாதேவர் என கூறுகின்றன. இவ்வூரில் இருந்து கொள்ளிடத்தைக் கடந்தால் இப்பொழுது திருவிஜயமங்கை என கூறப்படுங் கோவிலை அடையலாம். ஒரு வேளை அக்காலத்தில் இரண்டு கிராமங்களும் சேர்ந்து கோவிந்தபுதூர் என அழைக்கப்பட்டிருக்கலாம். தற்பொழுது கொள்ளிடம், இவ்வூர்களை இரண்டாகப் பிரிக்கிறது. கல்வெட்டுக்களின் மூலம் இவ்வூர் ஆற்றிற்கு வடகரையில் இருப்பதாக அறியலாம். ஒருவேளை கொள்ளிடம் திசைமாறி இருக்கலாம். ஆகையால் இவ்வூர் தற்போது கொள்ளிடத்தின் தென் கரையில் உள்ளது.

இங்கு பசு லிங்கத்தின் மேல் பால் சொரிந்து அபிஷேகம் செய்ததால் இவ்வூர் கோவிந்தபுதூர் எனப் பெயர் பெற்றது. இதை ஞானசம்பந்தர்,

"கோதனம் வழிபட குலவும் நான் மறைவேதியர் தொழுதெழு விஜயமங்கையே" எனவும், அப்பர்

"வெண்விடைக்கு அருள் செய் விஜயமங்கை" எனவும் தேவாரப் பாடல்களில் கூறுகிறார்கள்.

இக்கோயிலில் அர்ச்சுனன் வழிபட்டதால் விஜயமங்கை எனப் பெயர் ஏற்படலாயிற்று. இதை "பாண்டுவின் மகன் பார்த்தன் பணி செய்து வேண்டும் நல்வரம் கொள் விஜயமங்கை" என அப்பர் தேவாரத்தில் குறிப்பிடுகிறார். இது கல்வெட்டுக்களில் ஒருபிரமதேய மாகக் குறிக்கப்படுகிறது. இதையே சம்பந்தர் தேவாரத்தில், "நான் மறை வேதியர் தொழு தெழும் விஜயமங்கையே" என குறிக்கிறார்.

இது வெகு அழகான சோழர் காலத்துக் கற்றளி. பராந்தகன் காலத்தில் ஆரம்பித்து விக்ரம சோழன் காலத்தில் இக்கோவில் கட்டி முடிக்கப் பட்டிருக்க வேண்டும் என ஸ்ரீபாலசுப்ரமண்ய ஐயர் நினைக்கிறார். இங்குள்ள பரகேசரி கல்வெட்டு பராந்தகன் காலத் தினது என சரித்திர ஆசிரியர்கள் நினைப்பதாலும், பாரந்தகச் சதுர் வேத மங்கலம் என கல்வெட்டுகள் கூறுவதாலும் இந்த ஊகம் சரி யானதாக இருக்கலாம். தவிரவும் இங்குள்ள சில சிற்பங்கள் பராந்தகன் காலப் பாணியில் உள்ளது. இக்கோவிலில் உள்ள பிரம்மா, விஷ்ணு, காலாரி, துர்க்கை, பிக்ஷாடனர், துவாரபாலகர்கள் ஆகியவை வெகு அழகான சோழர் சிற்பங்கள். இக்கோவிலில் நடராஜர், மகேஸ்வரி அம்மன், பார்வதி, கணபதி, நந்திகேஸ்வரர் போன்ற வெகு அழகிய சோழப் படிமங்களையும் காண்கிறோம்.

இக்கோவிலில் பல கல்வெட்டுகள் உள்ளன. உத்தம சோழன் காலத்தில் மைசூர் பிராந்தியத்தில் உள்ள கோலாரைச் சேர்ந்த அம்பலவாணன் பழுவூர் நக்கன் என்பவர் பெரிய ஸ்ரீவானவன் மஹாதேவி சதுர்வேதமங்கலத்து ஸ்ரீவிஜயமங்கலத்து மஹாதேவர் ஸ்ரீவிமானத்தைக் கல்லால் எடுத்துவித்ததை ஒரு கல்வெட்டு கூறு கிறது. மேலும் நடுவாயில் என்ற கிராமத்தை இக்கோவில் பூஜை களுக்காக மானியம் அளித்திருக்கிறான். இவன் கல்வெட்டுகள் கி பி. 979 முதல் கி பி 992 வரை காணப்படுகிறது ராஜராஜன் காலத்து கல்வெட்டில் கூத்தப்பெருமானையும் உமாபடாரிகையையும் எழுந் தருளிவித்து அவைகளுக்குப் பொன் அணிகலன்கள் இவன் கொடுத்தது கூறப்படுகிறது.

இவ்வதிகாரிக்கு இரு மனைவியர்கள் இருந்தனர் என கல்வெட்டு கள் மூலம் அறியலாம். ஒருவர் அபராஜிதன் செய்யவாய் மணி என்பவர். மற்றவர் சிங்கபன்மன் மகள் காஞ்சி அக்கன் என்பவர். பின்னவரை 'அக்கன்' எனக் கல்வெட்டு கூறுவதால் அவரே மூத்த மனைவியாய் இருந்திருக்க வேண்டும். இவர்கள் இருவரும் இக்கோவிலில் விளக்கு எரிக்க நிபந்தங்கள் விட்டிருக்கிறார்கள். உத்தம சோழன் காலத்து மற்றொரு கல்வெட்டு மூலம் அரயன் சங்கரநாராயண...

(9-ஆம் பக்கம் பார்க்க

# முறையூர்

**மா. செந்தில்செல்வக்குமரன்**
தொல்பொருள் அலுவலர், மதுரை

மதுரையில் இருந்து மருதிப்பட்டி வழியாகப் பொன்னமராவதி செல்லும் வழியில் 65 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது முறையூர் என்னும் கிராமம். இக்கிராமம் 'விக்கிரம பாண்டிய நல்லூர்' என்றும் 'சீர் சேர்ந்த மங்கலம்' என்றும் அழைக்கப்பட்டு வந்திருக்கிறது. இவ்வூரில் உள்ள பழைய கல்வெட்டு ஒன்றில் இவ்வூர் 'இச்சிசாத்த மங்கலம்' என்று குறிப்பிடப்படுகிறது.

**ஐந்து நிலை நாடுகள்**

முல்லை மங்கலம், கன்ன மங்கலம், சதுர்வேத மங்கலம், சீர் சேர்ந்த மங்கலம், வேல மங்கலம் என்ற ஐந்து மங்கலமும் ஐந்து நிலை நாடு என்று அழைக்கப்பட்டன. இவற்றுள் சீர் சேர்ந்த மங்கலமே இன்றைய முறையூர் ஆகும். கூளப்பாண்டியன் என்ற பாண்டிய மன்னன் பாண்டிய நாட்டினை ஆண்டு வரும் பொழுது, அவனுக்குக் கப்பம் கட்ட மறுத்து எதிர்த்து நின்ற பொன்னன், அமரன் என்ற இரு வீரர்களையும் பாண்டியனுக்குத் துணையாக நின்று போரிட்டுத் தோற்கடித்த பராக்கிரம பாண்டியன், மாமறைத்தேவன், வீரபாண்டியத்தேவன், விக்கிரம பாண்டியத் தேவன், செயவேழந் தேவன் என்ற அய்வருக்கும் கூளப்பாண்டியன் தன் நாட்டின் சில பகுதிகளை வழங்கினன். அதுவே ஐந்து நிலை நாடு என்று பெயர் பெற்றது.

**ஆறு**

இவ்வூரின் வடக்கே பாலாறு என்று சிற்றாறு ஓடுகிறது. இவ் வாற்றில் கற்பதுக்கைகள் காணப்படுகின்றன இப்பதுக்கை பெரிய பெரிய கற்பாளங்களால் அமையப் பெற்றது. இப்பதுக்கைகளைச் சுற்றி உருண்டை வடிவிலான செம்புராங் கற்கள் வட்டமாக வைக்கப் பட்டுள்ளன. இவ்வட்டத்தின் விட்டம் சுமார் 6.83 மீட்டர். இந்த இடத்தில் சில மாதங்களுக்கு முன்பு ஆற்றில் வெள்ளம் வந்து வற்றிய பிறகு எலுப்புக்கூடு ஒன்று காணப்பட்டதாகக் கூறப்படுகிறது.

மேலும் இப்பாலாற்றிற்கு வடக்கில் உள்ள வயல் ஒன்றில் கிணறு தோண்டும் பொழுது பல முது மக்கட் தாழிகள் கிடைத்த [illegible]கவும் அவற்றில் மண்டை ஓடு, மற்றும் சில சிறிய மட்கலன்களும் [illegible]ந்ததாகவும் கூறப்படுகிறது.

**கோயில்கள்**

இவ்வூரில் சிவன் கோயில், அய்யனர் கோயில், பிள்ளையார் கோயில், பொன்னாண்ட கருப்பர் கோயில் ஆகிய கோயில்கள் உள்ளன. இவற்றுள் சிவன் கோயில் 1870-இல் ராமன் செட்டியாரவர்களால் கட்டப்பட்டது ஆகும். இந்தக் கோயிலில் பெரி. பழ. பழனியப்பச் செட்டியார், கவுரி வல்லப முத்து, வடுகநாதராஜா ஆகியோரின் ஆள் உயர சிலைகள் உள்ளன. பழைய கோயிலின் பகுதிகள் இக்கிராமத்தில் ஆங்காங்கே சிதறிக்கிடக்கின்றன. அவற்றில் சில கற்களில் காணப் படும் துண்டுக் கல்வெட்டுக்களின் எழுத்தமைதியினை நோக்கும்போது கி.பி. 13-ஆம் நூற்றுண்டைச் சார்ந்ததாக இருக்க வேண்டுமெனத் தெரிகிறது. பழைய கோயிலைச் சார்ந்த நந்தி, பைரவர், சண்டி கேஸ்வரர், பிள்ளையார் ஆகிய தெய்வங்களின் சிலைகள் தற்பொழுது உள்ள புதிய சிவன் கோயிலில் இருக்கின்றன.

மேலும் வன்னியராஜன் என்ற மன்னன், இவ்வூர் மருத மரத் தடியில் சிவலிங்கம் ஒன்று ஸ்தாபித்து இருக்கக் கண்டு, இங்கு ஆலயம் மண்டபங்கள், குளங்கள், சிப்பந்திகள், மானியங்கள் ஆகியவைகளை அமைத்திருக்கிறுன் என்பதை இவ்வூரில் கிடைத்த ஓலைச்சுவடி ஒன்றின் மூலம் அறிய முடிகிறது.

அய்யனர் கோயில் கற்களால் ஆகியது. கோயில் அத்துணை பழமையானதாக இல்லாவிட்டாலும் இங்கு காணப்படும் அய்யனர் சிலை கி.பி. 11-ஆம் நூற்றுண்டைச் சார்ந்ததாகத் தெரிகிறது. இந்த அய்யனரை மாசாத்தய்யனர் என்றழைக்கின்றனர்.

இவ்வூரில் இருந்து இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் ஓட்டைக் கோயில் உரணி என்று ஓர் இடம் உள்ளது. அங்கு கி.பி. 17-ஆம் நூற்றுண்டைச் சார்ந்த சுப்பிரமணியர் சிலை உள்ளது. இதன் இடுப்புக்கு கீழ் உள்ள பகுதி மண்ணுட் புதைந்துள்ளது.

இவ்வூரில் இருந்து சுமார் 4 கிலோ மீட்டர் தொலைவில் நரியாறு என்று ஒரு இடம் உள்ளது. இங்கு ஒரு நந்தியும் கோயிலின் சில பாகங் களும் சிதறிக் கிடக்கின்றன. இங்கு உள்ள சிறு மேட்டில் பானை ஓடுகள் மிகுதியாய்க் காணப்படுகின்றன.

**இவ்வூரில் மீனுட்சியம்மன் வந்ததற்கான கதை**

காரைக்குடி தாலுகாவில் உள்ள வன்னியன் சூரக்குடி என்ற இடத்தை ஆண்டு வந்த மகாராஜா தினந்தோறும் குதிரையில் மதுரை வந்து மீனுட்சியம்மனை தரிசித்து விட்டு பின்பு ஊர் திரும்பி வந்து உணவு அருந்துவதனை வழக்கமாகக் கொண்டிருந்தான். இப்படி இருக்கையில் அவனுக்கு வயதாகி விட்ட காரணத்தால் மதுரை வரை வர இயலவில்லை. எனவே மீனுட்சியம்மனைத் தரிசிக்க (வேண்ட), மீனுட்சியம்மன் இம்மன்னன் பொருட்டு முறையூரில் காட்சியளிக்க, இம்மன்னன் மீனுட்சியம்மனுக்கு முறையூரில் கோயிலெடுத்து வழி பட்டு வந்தானும். இம்மன்னனுக்கு முறையூர் வரை கூட வர

முடியாத நிலையில் உடல் தளர்ச்சியுறவே மீனுட்சியம்மனிடம் மன்னன் மறுபடியும் முறையிட, மன்னன் பொருட்டு அம்மன் வன்னியன் சூரக் குடியிலும் காட்சியளித்ததாகக் கூறப்படுகிறது.

**மக்கள்**

பள்ளர், பறையர், செட்டியார், குயவர், வலையர், கள்ளர் வேளாளர், வண்ணுன், அம்பட்டர், முகம்மதியர், பிராமணர், நாடார், பணிக்கர், அகமுடையார் ஆகிய வகுப்பார் இவ்வூரில் உள்ளனர். இவர்களுள் வலையர் என்பவர்கள் தங்கள் இனம் கேரளாவில் இருந்து வந்தது என்றும், தங்களை யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரல் இரும் பொறையின் வழி வந்தவர்கள் எனவும் கூறிக் கொள்கின்றனர்.

**புலவர்கள்**

இவ்வூர் ஒரு காலத்தில் நல்லூர் என்று அழைக்கப்பட்டு வந்ததாலும், இவ்வூரில் நத்தம் என்று ஒரு இடம் உள்ளதாலும் சங்க காலப் புலவரான நல்லூர் நத்தத்தனுர் இவ்வூரைச் சேர்ந்தவர் என்று இவ்வூரார் பெருமையாகக் கூறிக் கொள்கின்றனர். இக்கருத்து ஆய்வுக்குரியது.

19-ஆம் நூற்ருண்டைச் சார்ந்த பாலகிருஷ்ணக் கவிராயர் என்ற புலவர் இவ்வூரைச் சார்ந்தவர். இவர் காதற் பிரபந்தம், விஜயக்கும்மி, சித்திரக்கவி போன்ற நூல்கள் இயற்றியுள்ளார்.

தற்பொழுது இவ்வூரில் காட்டுப் புலவர் என்று ஒருவர் இருக்கிருர். இவர் காடுகளில் ஆடு மேய்க்கச் செல்லும் பொழுது கையிலே ஓலைச்சுவடி எழுத்தாணியுடன் செல்வாராம். கவிதை உதய மாகும் பொழுது உடன் மரத்தடியில் உட்கார்ந்து எழுதுவாராம். ஆதலால் இவரை இவ்வூர் மக்கள் காட்டுப் புலவர் என அன்புடன் அழைக்கின்றனர். இவர் பொன்னுண்ட கருப்பர் ஆனந்த களிப்பு, 2. மீனுட்சியம்மன் பேரில் பதிகம், 3. காத்தய்யனுர் பேரில் அடைக்கலப் பதிகம் 4. நாட்டிய க்கும்மி 5. நாகரிகக்கும்மி 6. மோகனக்கும்மி போன்ற கவிதை இலக்கியங்களை இயற்றியுள்ளார்.

மேலும் இவ்வூரில் சொக்கலிங்க நாதப் புலவர் என்று ஒரு புலவர் இருக்கிருர்.

**இவ்வூரைச்சுற்றிக் கோட்டைகள்**

இவ்வூரைச் சுற்றிக் கோட்டை என்ற பெயருடைய ஊர்கள் மூன்று உள்ளன. தெற்கில் மல்லாக் கோட்டை, S.S. கோட்டை என்ற ஊர்களும்; கிழக்கே கோட்டையிருப்பு என்ற ஊரும் காணப் படுகின்றன.

**ஓலைச்சுவடி கூறும் உண்மை**

மதுரையைக் கூனைப்பாண்டியன் என்ற பாண்டிய மன்னன் ஆண்டு வரும்பொழுது பொன்னன் அமரன் என்ற இரண்டு வீரர்கள்

பாண்டியனுக்கு பகுதிப் பணம் கொடுக்க மறுத்துவிட்டனர். பாண்டியன் அவர்கள் மீது படையெடுத்துச் சென்று தோல்வி அடைந்துவிடுகிறுன். பின்னர் பாண்டியன் சேர மன்னன் ஸ்ரீரவி குப்த சேர தேவபாண்டியன் உதவியை நாடுகிறுன். சேர மன்னன் தமது இளைய மக்களாகிய பராக்கிரம பாண்டிய தேவன், மாறைத் தேவன், வீரபாண்டிய தேவன், விக்கிரம பாண்டிய தேவன், செய வேழங்தேவன் ஆகிய ஐவரையும் பாண்டியனுக்குத் துணையாக அனுப்பிவைக்கிறுன். ஐவரும் படையுடன் பதிக் கோட்டை சென்று பொன்னன், அமரன் ஆகிய இருவரையும் தோற்கடிக்கிறுர்கள். கூளைப்பாண்டியன், நன்றிக் கடனுக ஐவருக்கும் பாண்டிய நாட்டில் சில வளமான பகுதிகளை வழங்கி, ஐவரையும் அங்கு இருக்கும்படி கேட்டுக்கொள்கிறுன். இந்த ஐவருக்கும் வழங்கிய பகுதியினை ஐந்து நிலை நாடு என்று பெயரிட்டான். ஐந்து நிலை நாடுகளில் முறையூர் என்ற பகுதி ஒன்ருகும்.

முறையூரைச் சேர்ந்த சி.பெ. சின்னையா என்பாரிடமிருந்து வாங்கிய ஓலைச்சுவடி ஒன்றில் மேற்கண்ட பொன்னன், அமரன் வரலாறு உள்ளது. இந்த ஓலைச்சுவடிகளின் வாசகங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

1 சுபஸ்ரீ மகாமண்டலேஸ்வரன் அரியதள விபாடன் பாஷைக்குத் தப்புவராய கண்டன் கண்ட நாடு கொண்டு கொண்ட நாடு கொடாதான் முத்தமிழரசர் கண்டன் சேரமண்டலத்து[ஸ்தாப]

2 ஞசாரியன் சோழமண்டலப் பிரதிஷ்டாசாரியன் பாண்டி மண்டலம் ஸ்தாபனுசாரியன் மநுநீதி சங்கற்பித்து பிதிர் விராட்சியம் பண்ணியருளா நின்ற சாலிய வாகன [சகா]

3 ப்தம் நானூற்றி பதினேழு கெலியாப்தம் மூவாயிரத்து அய்ந்நூற்றி தொன்நூற்றேழு இதன் மேல் செல்லா நின்ற விசுவாச ஸூ ஆவணி மீ பதினுறு தேதியும் சோம வ[ாரமும்]

4 பூச நச்செந்திரமும் பஞ்சமி திதியும் கூடிய சுப தினத்தில் அங்கல சாண்ணம்மை நாடாகிய பாண்டிப் பணி மண்டில வைய்கை தாம்பிரபரணி வளங்கல் வாய்ந்த கொற்கை

5 பதியில் செங்கோலோச்சிய வெண்டேர்ச் செழிய பாண்டிய ராச புதல்வன் ஸ்ரீ கூளைப்பாண்டியன் ஆள்கைகுள் பட்ட பதிக்கோட்டையில் பொன்னன் அம[ரன்[

6 இரண்டு வீரர்கள் மேல் கண்ட பாண்டியனுக்கு பகுதி பணம் கொடுக்க முடியாதென்று சொல்லப் பாண்டியன் படை யெடுக்க சேனையெல்லாம் சேதப்படுத்தி

7 முதுகிட்டோட செய்த பிறகு பாண்டியன் சோழன் பகுதி செலுத்தும் சேர தேசத்தை பரிபாலிக்கும் கேரளசிங்க வளநாட்டில் கரூர் மானகரம் ஸ்ரீரவி [குப்த சேர தேவ பாண்டி]

8 யராசனிடத்தில் ஷெ கூனப்பாண்டியன் தெரியப்படுத்திய பிறகு ஸ்ரீரவி குப்த சேர தேவ பாண்டியராசனுக்கு சோமேசத் தேவனுருடைய மகன் [மகா]

9 சந்திர குப்த தேவனுருடைய மகள் குமரியம்மையாரையும் மணம் பூண்டு மூத்த மனைவி மக ரவியம்மையாருக்கு ராஜராசேந்திரத் தேவ பாண்டியன்

10 மனைவி குமரியம்மையாருக்கு பராக்கிரம பாண்டியத் தேவன் மாமறைத் தேவன், வீரபாண்டியத்தேவன், விக்கிர பாண்டியத்தேவன், செய வேழந்தேவன்

11 வீரர்கள் பிறந்து எதிர்த்தோரை வென்று பராமக்கிரம சாலி களா யிருந்து வரும் தமது இளைய மக்களாகிய அய்ந்து வீரர்களையும் ஷெ ரவிகுப்த சேர தேவன் . . . .

12 சமூகத்தில் வரவழைத்து இளைய மக்களைப் பார்த்து நமக்கு பகுதி செலுத்தி வரும் கொற்கைப் பதி கூனப்பாண்டிய னுக்கு பகுதி செலுத்தாம

13 ல் பதிக் கோட்டையில் பொன்னன் அமரன் இருவரும் அடங்காமல் பாண்டியாள் சேனைகளையும் பிடித்தனராம் அவ்விடம் சென்று அவர்களை . . . .

14 தி கொடுத்து வாருங்களென்று இளைய மக்களுக்கு அறிவிக்க அய்வரும் புறப்பட ஷெ இளைய மக்கள் மாமன் வகையார் அம்பது வலசைப் பேரும் . . . . . .

15 றப்பட்டு கொற்கை பதி வந்து சேனைகளையும் பாண்டியனையும் கூட்டிக் கொண்டு பதிக் கோட்டைத் தேடி வரும் போது அம்பது வலசைப் பேர்களையும் பிற . . .

16 யிலிருக்கும்படி செய்து ஷெ அய்ந்து வீரர்களும் சேனைக ளோடு பதிக் கோட்டை சென்று பொன்னன் அமரனோடு போராடிச் செயம் பண்[ண] . . .

17 ம்ப அய்ந்து வீரர்களுக்கும் மேல் கண்ட அம்பது வலசைப் பேர்களில் ஆதிமுத்து தேவர் மகள் மங்கைகரசம்மை யாரை பராக்கிரம பாண்டியனுக்கு

18 கோபாலத் தேவர் மகள் குணபதியம்மையாரை மாமறைத் தேவபாண்டியனுக்கும் நெடுஞ்சேர தேவனூர் மகள் பார்வதியம்மையாரை வீரபாண்டியனுக்கு.........

19 வசந்திகா தேவியம்மையாரை விக்கிரம பாண்டிய தேவனுக்கும் சந்திர தேவனூர் மகள் தேவ சுந்தரியை செய வேலு தேவனுக்கும் மனம் ஒத்து செய்து

20 நாட்டிலே அய்ந்து வீரர்களுமிருக்க வேண்டு மென்று கூளப் பாண்டியன் தாழ்ந்து கேட்டுக் கொள்ள அய்வரும் சம்மதித்து மணம் நடந்தயிடத்தை

21 மொத்தா னென்று பேரமைத்து வீடுகளமைத்து அய்ம்பது வரிசை பேர்களோடு இருக்கச் செய்து இளைய மக்களாகிய அய்வருக

22 பிரான் மலைக்கும் அஞ்சுமுக நாட்டுக்கு தெற்கு திருமய நாட்டுக்கு மேற்கு கள்ள நாட்டுக்கு வடக்கு துவரங்குறிச்சி நாட்டுக்கு மே . . .

23 கிழ்மேல் பதினெட்டு காதம் தென்வடல் பத்து காதம் உள்ள பூமியை சாசுவதமாகச் செய்து அய்ந்து நிலை நாடு யென்

24 கொடுங்குன்றமாகிய பிரான்மலை மங்கைவரசர் கோயில் மேல் பாகத்தில் சிலாசாசனம் செய்து வைத்தேகினூர் வெண்டே(ர்)

25 ச் செழிய பாண்டியன் புதல்வன் ஸ்ரீ கூளபாண்டியன் கிரந்த பாஷையில் அசலுக்கு நேர் நகல்

பிரமதீச ஆ இது யெழுதியது முறையூர் கோபாலத்தேவர் வகயில் அழகிய சொக்கப்பனம்பல மகன் முத்தன தேவர்.

★

# மேலப்பனையூர் ஓலைச்சுவடிகள்

து. துளசிராமன்
தொல்பொருள் அலுவலர், திருச்சி

புதுக்கோட்டை மாவட்டம் திருமய்யம் வட்டத்தைச் சேர்ந்த மெலப்பனையூரிலிருந்து ஆறு ஓலைச்சுவடிகள் சேகரித்து வரப் பட்டுள்ளன. இவற்றுள் ஐந்து ஓலைச்சுவடிகள் சித்த வைத்தியர் திரு. கரு. சிவராமகிருஷ்ணன் என்பவரிடமிருந்தும் ஒரு சுவடி திரு. கரு. இராசேந்திரன் என்பவரிடமிருந்தும் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறைக்கு அன்பளிப்பாகப் பெறப்பட்டுள்ளன

**சுவடிகள் விவரம்**

முதல் சுவடி 112 ஏடுகள் கொண்டது. தமிழ் மொழியில் தமிழ் எழுத்துக்களால் எழுதப்பட்டுள்ளது. ஒற்றை மடலாலான ஏடுகளின் இருபுறமும் எழுதப்பட்டுள்ளன. ஏடுகளின் இடதுபுறம் துளையிடப் பட்டு ஒரு நூல் கயிற்றால் கோர்க்கப்பட்டுள்ளது. ஏடுகள் 37 செ. மீ. நீளமும் 25 செ. மீ. அகலமும் கொண்டுள்ளன. அறுபத்தி ஏழாவது ஏடு காணப்படவில்லை. 112 ஏடுகளில் 105 ஏடுகள் வரிசை எண்கள் குறிக்கப் பெற்றுள்ளன. இச்சுவடிகளில் எலும்புருக்கி, மேகம், பித்தம், பாரிசவாயு, ஒரு பக்க தலைவலி போன்ற சுமார் 400 வியாதிகளுக்கு சித்த வைத்திய முறைகள் கூறப்பட்டுள்ளன.

இரண்டாவது சுவடி 82 ஏடுகள் கொண்டுள்ளது. ஒற்றை மடலாலான ஏடுகளின் இருபுறமும் தமிழ் மொழியில் தமிழ் எழுத்துக் களால் எழுதப்பட்டிருக்கின்றன. ஏடுகள் 20 செ. மீ. நீளமும் 2.5. செமீ அகலமும் கொண்டுள்ளன. சில ஏடுகள் சிதைந்துள்ளன. இச் சுவடியும் சித்த வைத்திய முறைகளைப் பற்றியே கூறுகிறது.

மூன்றாவது சுவடி 116 ஏடுகளைப் பெற்றுள்ளது. ஏடுகள் ஒற்றை மடலால் செய்யப் பெற்று தமிழ் மொழியில் தமிழ் எழுத்தினால் இரு புறமும் எழுதப்பட்டுள்ளன. இடையில் சில இடங்களில் கிரந்த எழுத்துக்களும் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. ஏடுகள் 20 செ.மீ. நீளமும் 2.5. செ.மீ. அகலமும் கொண்டுள்ளன. இச்சுவடியில் சித்த வைத்திய முறைகளும் சாஸ்திர முறைகளும் விளக்கப்பட்டுள்ளன. சுவடியின் இறுதியில் சில ஏடுகள் சிதைந்துள்ளன.

நான்காவது சுவடி 60 ஏடுகளைக் கொண்டுள்ளது. மேலும் கீழும் மரத் தப்பைகளுக்குப் பதிலாகக் கனமான இரட்டை மடலாலான ஓலைகள் வைத்துக் கட்டப்பட்டுள்ளன. ஒற்றைமடலாலான ஏடுகளின் இருபுறமும் தமிழ் மொழியில் தமிழ் எழுத்துக்களால் எழுதப்பட்டுள்ளன. ஒவ்வொரு ஏட்டிலும் வரிசை எண்கள் குறிக்கப்

பட்டுள்ளன. ஏடுகள் 31.5 செ.மீ. நீளமும் 2.5. செ.மீ. அகலமும் கொண்டுள்ளன. இதில் மருத்துவம், இலக்கியம் தொடர்பான செய்திகள் கூறப்பட்டுள்ளன.

ஐந்தாவது சுவடி 248 ஏடுகள் கொண்டுள்ளது. இவற்றில் 42 ஏடுகளில் மட்டுமே எழுதப்பட்டுள்ளது. சுவடியின் மேலும் கீழும் மரத்தப்பைகள் உள்ளன. ஏடுகளின் வலது இடது ஆகிய இருபுறங்களிலும் துளையிடப்பட்டு நூற் கயிற்றால் கோர்க்கப்பட்டுள்ளது. ஒற்றை மடலாலான ஏடுகளின் இருபுறமும் தமிழ் எழுத்துக்களால் தமிழ் மொழியில் எழுதப்பட்டுள்ளன. ஏடுகள் 19 செ.மீ. நீளமும் 3.5. செ.மீ. அகலமும் கொண்டுள்ளன. இதில் சித்த வைத்திய சிகிச்சை முறைகள் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

ஆறுவது சுவடி 28 ஏடுகளைக் கொண்டுள்ளது. ஏடுகள் வரிசையாக இல்லாமல் இருந்தன. ஏடுகளை வரிசை எண்களின் வாரியாக அடுக்கிய போது, சில ஏடுகள் மட்டுமே கிடைத்திருப்பதை அறிய முடிந்தது. ஒற்றை மடலாலான ஏடுகளின் இருபுறமும் தமிழ் மொழியில் தமிழ் எழுத்துக்களால் எழுதப்பட்டுள்ளன. இவை 36 செ.மீ. நீளமும் 2 செ.மீ. அகலமும் கொண்டுள்ளன. சுவடியின் முதல் ஏட்டில் கீழ்க்கண்டவாறு உள்ளது.

1 வடிவெடித்து வேதமன பிரபாடுகினு மறிந்தரியா வண்ணம் வைகும் பொடியணியுந் திருமேனிப் புனிதன் மதுரைக் கிறைவன் புகழின் பாடல்

2 நெடிய கவிக் கல்லாடப் பெருட்ருரையை நிகழ்த்து நடு தாவந் திங்கள் சூடும் முடியசைத்து நன்று நன்றிதென மகிழுெ . . .

எனவே, இவை திருமேனிப் புனிதனுகிய மதுரைக் கிறைவனின் புகழைப்பாடும் பாடலாகிய கல்லாடம் என்னும் தமிழ் இலக்கியத்தை குறிக்கும் சில ஏடுகளாக இருக்கலாம்.

**சுவடிகளின் காலம்**

எழுத்துக்களின் வடிவத்தைக்கொண்டு இச்சுவடிகள் சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்டவையாக இருக்கலாம் என எண்ணலாம்.

**சுவடிகளில் பயன்படுத்தப்பட்டுள்ள தமிழ்**

மெய் எழுத்துக்களுக்குப் புள்ளி இல்லை. சில இடங்களில் கிரந்த எழுத்துகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. த்து, க்கு, ட்டி, ப்பூ, த்த, க்கி, ணம், யம், பும், வும், யில், ணம், சக ஆகியவை எல்லா இடங்களிலும் கூட்டெழுத்துக்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. சில இடங்களில் மு-வுக்கும் ளு-வுக்கும் அதிக வேறுபாடு தெரியவில்லை.

இச்சுவடிகள் அல்லாமல் இரட்டை மடலாலான ஒருதனி ஓலையும் கிடைத்துள்ளது. இது சுவடியின் முதல் ஏடாக காணப்படுகிறது. 37 செ.மீ நீளமும், 3 செ.மீ அகலமும் கொண்டுள்ள

இவ்வோலையின் வலப்புறம் சிறிது சிதைந்துள்ளது. இதில் மொத்தம் 16 வரிகள் காணப்படுகின்றன. சாலிவாகன சகாப்தம் 1708 (கி.பி. 1786)-ல் ஜெயசோழக்கம்பீர வளநாட்டைச் சேர்ந்த 26 நாட்டு மக்களும் ஒன்று கூடி செய்துகொண்ட ஒரு உடன்படிக்கையை இவ்வேடு குறிக்கிறது. ஒரு ஏடு மட்டுமே கிடைத்திருப்பதால் உடன்படிக்கையின் முழுச்செய்தியையும் அறிய இயலவில்லை. ஜெயசோழ கம்பீர வளநாட்டில் மொத்தம் 64 நாடுகள் இருந்தன. அவற்றுள் 26 நாடுகளைச் சேர்ந்தவர்கள் கூடி இவ்வுடன்படிக்கையைச் செய்துகொண்டனர்.

ஓலையில் குறிக்கப்பட்டுள்ள நாடுகள்

1. அஞ்சுநாடு
2. அனம்பூ நாடு
3. விரைகுடிநாடு
4. வார்பூருநாடு
5. நாவிலி நாடு
6. சொத்துப்பாதுநாடு
7. வடமலை நாடு
8. தென் மதுநாடு
9. வீசிங்கமநாடு
10. கூடவன்குடிநாடு
11. அஞ்சுநிதுபத்துநாடு
12. பெருவாசல்நாடு
13. கானாடு
14. கலவாசல்நாடு
15. பாதுயநாடு
16. பெருமாநாடு
17. கவிநாடு
18. வல்லநாடு
19. செங்காட்டுநாடு
20. ஆலங்குடிநாடு
21. பொன்னமராபதிநாடு
22. குலமங்கலியநாடு
23. கோனாடு

(மற்ற மூன்று நாடுகளின் பெயர்கள் சிதைந்துள்ளன.)

தனி ஓலை - மேலப்பனையூர்

முதல் பக்கம்

அம்மன் துணை

1 ஸ்ரீ மகா மண்டலலீசுபரன் அரிய தளவியபாடன் பாசைக் கித்தப்பூ மூவராய கண்டன் கண்டன்னுடு கெ . . . . .

2 கொண்ட நாடு குடாதான் பாண்டி மண்டலங் தார பஞ்சாளன் னுசாரியார் சோள மண்டலப் பிறதெச்சன்னுசாரி . . . . .

3 னட மண்டலப் பிறதாபன் கட்டாரி சாளுவன் தெட்டாரி யுடை யொனதுட்ட நிலத்துட்டன் நெட்டூரன் துரைகள் தெ . . . . .

4 சாடிக்காற்கண்டன் சம்மெட்டி நாறுயின்ன யீளமுங் கொங்கும் யாற்ப்பாணமு மகிஷசெட்டை கொண்ட முனியார் . . . .

5 ராச மாத்தாண்டன் ராசகெம்பீரன் ராசபயங்கரன் ராசாக் கள் தம்பிரான் ராசவீர வசந்தராயர் மல்லிகச்சிராயர் மகா . .

6 மகாராயர், வீமராயர், விசையராயர், விக்கிருமராயர் அசுபதி கிஷபதி நரபதி தெச்சிஞதிபதி பிறிதிவிராச்சிய பராம பண்ணி . . . .

7 ய நின்ற சாலீக வாகன சகாத்தம் சூளாஅமிர் மேல்ச் செல்லாயி நின்றெென பிறசோற்ப்பதி ஸு பங்கனி மீ ௰௬ உ பண்ணின . . . .

8 வலங்கை யிடங்கைப் பட்டடையாரவர்கள் அன்வாருள்ளிட் டார்களும் ரா ராய மாணீயராயர் அய்யா அவர்கள் சீ . . . .

இரண்டாம் பக்கம்

9 துத்தஞ்சு நாடு அனம்பூநாடு வீரைகுடிநாடு வார்பூருநாடு நாவிலிநாடு சொத்துப் பாது நாடு பெ . . . .

10 நாடு வடமலைநாடு தென்மதுநாடு வீசிங்கமநாடு கடவன்குடி நாடு அஞ்சுநிது பத்துநாடு பெருவாசல் நாடு . . . .

11 ல நாடு கானுடு கலவாசல் நாடு பாதுயநாடு பெருமாநாடு கவி நாடு வல்லநாடு செங்காட்டுநாடு ஆலம்ங்குடிநாடு . . . .

12 வலநாடு பொன்னமராபதிநாடு குளமங்கிலியநாடு சியசோள கெம்பீரா வளாநாடாகிய கோனுடு ஆயிருவ . . . .

13 ாடு வலங்கை யிடங்கைப் பட்டடையாரவர்களும் கூடியிருந்த வர்கள் கூட்டம் கண்டெடுத்தாள் பட்டி கூட்டம் கொண்டு . . . .

14 பட்டடையார் கயிக்குறீ மதியாணிக் கூட்டம் ரெண்டு வகைப் பட்டடையார் கயிக்குறீ காப்புக்குடி கூட்டம் ரெண்டு வகைப்ப . . . .

15 யார் கய்க்குறீ அகாச உளறிக் கூட்டம் ரெண்டு வகைப் பட்ட டையார் கய்க்குறீ கிரையாச்சிது பெரிய பாறைக் கூட்டத்தில் . . . .

16 டு வகைப் பட்டடையார் கய்க்குறீ உளனே யூரக கூட்டத்தில் ரெண்டு வகைப் பட்டடையார் கய்க்குறீ கடிபியாப்படி கூட்டத்தி . . . .

★

# கோனேரிராயன் காசு

குடவாயில் பாலசுப்பிரமணியன்

கல்வெட்டுக்கள், செப்பேடுகள் போன்ற தொல்லியல் சின்னங்களே நமது வரலாற்று ஆய்வுக்கு மிகவும் இன்றியமையாதனவாய்த் திகழ்கின்றன. இவ்வகையில் சில வரலாற்று ஆய்வுகளுக்கு நாணயங்களின் பங்கு மிகவும் பயனுள்ள வகையில் அமைகின்றன. பத்துப் பாட்டு போன்ற சங்க இலக்கியங்களில் நாணயங்கள் பற்றிய தொன்மைக் குறிப்புகள் காணப்பட்டாலும் இதுவரை நாணய ஆராய்ச்சியாளர்களுக்குக் கிடைத்துள்ள தமிழகத்து நாணயங்களை நோக்கும் போது, தமிழ் எழுத்துக்களுடன் காணப்படும் நாணயங்களின் எண்ணிக்கை மிகக் குறைவேயாகும்.

'கோனேரிராயன்' என்ற தமிழ் எழுத்துக்களுடன் கூடிய நாணயங்கள் இதற்கு முன்பும் நாணய ஆராய்ச்சியாளர்களுக்குக் கிடைத்திருந்தாலும், அண்மையில் கீழத் தஞ்சை மாவட்டத்தில் சில இடங்களில் பூமியில் புதைந்த நிலையில் சில காசுகள் இக்கட்டுரை ஆசிரியருக்கும் கிடைத்தன. இக்காசுகளில் குறிப்பிடப்படும் கோனேரி ராயன் பற்றி ஆராய முற்படும் போது, சில அரிய கல்வெட்டுச் சாசனங்கள் துணையாய் அமைகின்றன. இவற்றின் அடிப்படையில் இம்மன்னன் பற்றிய தெளிவான வரலாற்றை இக்கட்டுரையில் விரிவாகக் காண்போம்.

கோனேரிராயன் என்ற பெயர் பொறிக்கப்பட்ட செப்பு நாணயங்கள் இரண்டு வகைகளாகக் கிடைக்கின்றன. ஒருவகைக் காசுகளில் ஒருபுறம் நின்ற எருதும், அதன் முன்பு குத்துவாள் ஒன்றும், இவைகளுக்கு கீழ் சில புள்ளிகளும் காணப்படுகின்றன. மறுபுறம் இரண்டு கோடுகளினால் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. மேல் பிரிவில் "கொ" என்றும், நடுவில் 'னெரி' என்றும், கீழ் பகுதியில் "ராயன்" என்றும் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. பிறிதொரு வகைக் காசுகளில் ஒருபுறம் நிற்கும் எருதின் அருகே வெண்கொற்றக் குடையும், மறுபுறம் "கொனெரிராயன்" என்ற எழுத்துக்களின் மத்தியில் உடைவாளும் காணப்படுகிறது.

மேற்குறித்த இரு வகை நாணயங்களையும் ஆராய்ந்த நாணய இயல் அறிஞர் எலியட் தம் **'Coins of South India'** (தென் இந்தியக் காசுகள்) என்னும் நூலில் இருவகை நாணயங்களையும் புகைப்படங்களுடன் குறிப்பிட்டு, இவைகளைப் பிற்காலப் பாண்டியர்களின் நாணய வரிசையில் சேர்த்துள்ளார். இந்நாணயங்களின் காலத்தையோ அல்லது அதில் குறிப்பிடப்படும் 'கோனேரிராயன்' என்ற மன்னன் பற்றியோ எதுவும் குறிப்பிடவில்லை.

இந்நாணயம் பற்றிய ஆய்வின் முதல் கட்டமாக இதில் குறிப்பிடப்படும் 'கோனேரிராயன்' என்ற தமிழ் எழுத்துக்களின் கால அமைதியை ஆராய்வது இன்றியமையாத ஒன்று. இவ்வெழுத்துக்களை எழுத்தியல் (Palaeography) அடிப்படையில் ஆராயும் போது இவை கி.பி. 15-ஆம் நூற்றுண்டு தமிழ் எழுத்துக்களாகவே உள்ளன. எனவே இந்நாணயத்தின் காலத்தை கி.பி. 15-ஆம் நூற்றுண்டாக எழுத்தமைதியால் நிர்ணயிக்க இயலுகிறது.

அடுத்து கி.பி. 15-ஆம் நூற்றுண்டு தமிழக மற்றும் ஆந்திர மாநில கல்வெட்டுக்களை முற்றிலும் ஆராயும் போது மொத்தம் 6 கல்வெட்டுச் சாசனங்கள் கோனேரிராயன் என்ற தமிழ் மன்னன் பற்றியும், இவனது காலம் பற்றியும் தெளிவாகப் பேசுகின்றன. இவை அனைத்தையும் தொகுத்து நோக்குவோம்.

திருச்சி மாவட்டம் உய்யகொண்டான் திருமலை ஸ்ரீ உஜ்ஜீவநாத சுவாமி திருக்கோயிலில் இம்மன்னன் பற்றிய இரண்டு கல்வெட்டுக்கள் உள்ளன.[1] சக ஆண்டு 1412 ஆம் ஆண்டு (அதாவது கி.பி. 1490), தமிழ் வருடம் சவுமியவும், ஆடி மாதம் 21-ஆம் நாளும் குறிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டில் "ஸ்ரீமன் மகாமண்டலேச்வரன் பட்டுக்கட்டாரி இராயவசப சங்கர மதியாத மன்னன் மணவாளன், காஞ்சிபுரவரதீசுவர ஸ்ரீராஜகோனேரிதேவ மகாராசா" என்ற புகழ் மாலையோடு, இம்மன்னன் இத்திருக்கோயில் இறைவனுக்கு அளித்த அறக்கொடைகள் பற்றி விவரிக்கப்பட்டுள்ளது. இச்சாசனத்தில் தன் அரண்மனைக்குச் சில குறிப்பிட்ட வரிகள் மூலம் கிடைக்கும் நிதியை திருக்கோயில் பூஜைகளுக்காகத் தாம் அளிப்பதாகக் கூறிக் கொள்கிறுன். எனவே கோனேரி தேவ மகாராஜன் என்ற பெயரோடு இவன் கி.பி. 1490-ல் திருச்சி பகுதியை ஆட்சி புரிந்துள்ளான் என்பதை உணர முடிகிறது. மெய்க்கீர்த்தியில் காணப்படும் 'மதியாத மன்னன் மணவாளன்' என்ற தொடரால் இவன் எந்த ஒரு மன்னனுக்கும் அடிபணியாது இருந்தனன் என்பதை அறிய இயலுகிறது.

இதே போன்று திருச்சி மாவட்டம் திருமழபாடி திருக்கோயிலில் உள்ள மண்டபம் ஒன்றில் காணப்படும் கல்வெட்டில் "மகாமண்டேலுச்வரன், காஞ்சிபுரவரதீசுவரன், பட்டுக் கட்டாரி, இராயபசவசங்கர மதியாத மன்னர் மணவாளன் கோனேரி தேவ மகாராசர் கண்ட கோனேரிராயன் திருமண்டபம்" என்று கூறப்பட்டுள்ளது. இக்கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ள ஆண்டு கி.பி. 1490 ஆகும்.[2]

கோனேரிராயன் "திருச்சிராபள்ளி சீமைக்கு" கி.பி. 1488 முதல் 1492 வரை மன்னனுக இருந்ததாகவும் பின்பு இவ்வுரிமை இழந்த

1 A. R. E. 1939-40 To 1942-43 page 275, para 120;
S. I. T. I. Vol. II, No. 747

2 A. R. E. 49/1920

தாகவும் கல்வெட்டுகள் கூறுகின்றன.[1] விஜயநகர மன்னனான நரச நாயக்கன் தம் கல்வெட்டொன்றில்[2] விஜயநகர அரசுக்குப் பணியாத திருச்சி சீமையின் அரசனான கோனேரிராயனைத் தான் முறியடித்து அவனது திருச்சி சீமையின் அரசுரிமையைப் பறித்துக்கொண்ட தாகப் பெருமையோடு கூறிக் கொள்கிறான். நரச நாயக்கனின் கல்வெட்டின் ஆண்டு கி.பி. 1492 ஆகும். இதுவரை கண்ட கல்வெட்டுச் செய்திகளால் 1488 முதல் 1492 வரை திருச்சிப் பகுதியை ஆட்சி புரிந்த ஒரு மன்னனாக கோனேரிராயன் விளங்கியிருக்கிறான் என்பது தெளிவு.

திருச்சிப் பகுதியை ஆண்டு கொண்டிருக்கும்போதே தஞ்சைத் தரணியிலும் இவனது செல்வாக்கு மிகுந்து இருந்தது என்பதைத் தஞ்சை மாவட்டம் கும்பகோணம் நாகேசுவரர் திருக்கோயில் கல்வெட்டொன்றால் அறிய முடிகிறது..[3] கி.பி. 1491-ல் வெட்டப்பட்ட இச் சாசனத்தில் மதியாத மன்னர் மணவாளனாய்த் திகழ்ந்த கோனேரி ராயனின் கட்டளையால் அளிக்கப்பட்ட நிவந்தம் பற்றி குறிப்பிடப் படுகிறது.

கி.பி. 1492-ல் திருச்சியின் உரிமையை இழந்த இம்மன்னன் பற்றிய செய்திகள் மேலும் உண்டா என ஆராய முற்படும்போது தஞ்சாவூர் மாவட்டம் திருச்செங்காட்டங்குடி உத்திராபதீசுவரர் திருக் கோயில் கல்வெட்டொன்று[4] இவனை மன்னனாகவே கூறுகிறது. இக் கல்வெட்டிலும் இவன் பிற மன்னர்களை மதியாத மணவாளனாகவே கூறப்பட்டுள்ளான். இதன் காலம் கி.பி. 1495 ஆகும். 1492-ல் திருச்சியை இழந்த இம்மன்னவன் 1495-ல் தஞ்சையில் மன்னனாகக் கூறப்படுவதால் இவன் தஞ்சைக்கு மன்னனாகத் திகழ்ந்தான் என்பதை இக் கல்வெட் டால் உணரலாம். மேலும் இக்கல்வெட்டில் மாளுவ சக்கரவர்த்தி யின் வேண்டுகோளுக்கு இணங்க இறைவன் உத்திராபதி நாயகருக்கு விழா எடுப்பதற்காகத் தனக்கு மக்கள் அளிக்கும் வரியிலிருந்து அளித்த தாகக் குறிப்பிடப்படுவதால் இவன் இப்பகுதியின் மன்னவன் என்பது தெளிவாகிறது. கி.பி. 1493-ல் வெட்டப்பட்ட நெல்லூர் கல்வெட் டொன்றிலும் இவன் மன்னனாகவே கூறப்பட்டுள்ளான்.

அடுத்து தஞ்சாவூர் மாவட்டத்தில் பேரூர் ஒன்று இவன் பெயரால் இன்றும் திகழ்கின்றது. "கோனேரிராஜபுரம்" என அழைக்கப்படும் இவ்வூர் இவனது காலத்தில் தான் பெயர் மாற்றம் அடைந்துள்ளது. கி.பி. 14-ஆம் நூற்றாண்டு வரை வெட்டப்பட்டுள்ள இவ்வூர் கல்வெட்டுக்களும் (சோழ–பாண்டிய மன்னர்களின் கல்வெட்டுக் கள்) மற்றும் தேவாரம் போன்ற இலக்கியங்களும் "திருநல்லம்" என்றே இவ்வூரை அழைக்கின்றன. பின்பு 15-ஆம் நூற்றாண்டில் இவனது செல்வாக்கால் திருநல்லம் - கோனேரிராஜபுரம் என மாறிவிட்டது போலும்.

---

1 S. I. T. I. Vol. II, 747
2 A. R. for 1936-37, para 78.
3 S. I. T. I. Vol. II, No. 1002.
4 A. R. E. 74 of 1913, Topographical list of Madras Presidency No. 794 page 1327

# விலங்கச்சம்

க. குழந்தைவேலன்
கல்வெட்டு ஆய்வாளர்

வரலாற்றுக் காலத்திற்கு முன்னும் பின்னும் மனித வாழ்விற்குப் பெரும்பகையாக-இடராக-விலங்கினங்கள் இருந்துவந்துள்ளன. விலங்குகளோடு போட்டியிட்டு அவற்றை வென்று வாழ்வதே மனிதனின் பெருமுயற்சியாக ஒரு காலத்திலிருந்தது. கொடியவிலங்குகளோடு போட்டியிடவும், எளிய விலங்குகளை வேட்டையாடவுமே மனிதன் தொடக்கத்தில் கருவிகளைச் செய்யவேண்டியிருந்தது. பழைய கற்காலக் கருவிகளும், புதிய கற்காலக் கருவிகளும் தோன்றுவதற்குக் காரணமாக மனிதனின் உணவுத் தேவைமட்டுமே முதன்மையாக இருந்திருக்கமுடியாது.

நாகரீகமற்ற மக்கள், குழுக்களாகச் சேர்ந்து வாழ்வதற்கு இவ் விலங்கச்சமே முதற்காரணமாக இருக்கவேண்டும். இதனால் தங்களுள் வலிமையும், துணிவும் கொண்ட ஒருவரையே தலைவராகக் கொண்டனர். அத்தலைவர்களின் தலையாய கடன் மனிதப் பகையைவிட விலங்குப் பகையிடமிருந்து மனித இனங்களைக் காக்க வேண்டுவதே. இதனைப் பெரிய புராணத்தில் கண்ணப்ப நாயனார் வரலாற்றில்;

அங்கண்மலைத் தடஞ்சாரற் புனங்களெங்கும்
மடவேனம் புலிகரடி கடமை யாமா
வெங்கண்மரை கலையொடுமான் முதலா யுள்ள
மிருகங்கள் மிகநெருங்கி மீதூர் காலைத்

திங்கள்முறை வேட்டைவினை தாழ்த்த தென்று
சிலைவேடர் தாமெல்லாந் திரண்டு சென்று
தங்கள்குல முதற்றலைவ னாகி யுள்ள
தண்டெரிய னாகன்பாற் சார்ந்து சொன்னார்

என வரும் பாடலால் உணரலாம். இதனால் குழுத் (இனத்) தலைவர்கள் விலங்குகளிடமிருந்து தம்மக்களைக் காத்து வருதல் இன்றியமையாக் கடனாயிற்று. பின் வந்த மன்னர்களும் இதனை ஒரு பெருங்கடமையாகக் கொண்டிருந்தனர். கி.பி. 14-ஆம் நூற்றாண்டு வாக்கில் தென்னிந்தியாவை ஆண்ட விசயநகர மன்னர்கள் தங்கள் மெய்க்கீர்த்திப் பகுதியில் யானை வேட்டையைச் சிறப்பித்து "கஜ வேட்டை கண்டருளி" எனக் கூறிக்கொள்கின்றனர். புறநானூற்றிலே வரும் வல்வில் ஓரியின் வேட்டைத்திறம் அளவுகடந்து புகழப்படுகிறது.

சங்க இலக்கியங்களில் வீரமறவர்கள் புலியின் பல்லைக் கொணர்ந்து தம்மனைவியர்க்குத் தாலியாக அணிவித்துள்ளனர். தலைவியர், களவுக் காலத்தில் தம்தலைவர்கள் இரவு நேரங்களில் தம்மைக் காணுதற்காக வரும் வழியில் உள்ள புலி, பன்றி, யானை போன்ற விலங்குகளுக்காக அஞ்சிக் கலங்குகின்றனர்.

தலைவனோடு உடன்போகும் தலைமகள் ஒருத்தி, ஏதோ காரணத்தால் காட்டுவழியில் தலைவன் இறந்துபட, தன் ஆற்றாமையை வாய்விட்டழுதால் அவ்வொலி கேட்டு புலி வந்து தாக்குமோ என அழவும் முடியாமல், அழாதிருக்கவும் முடியாமல் அலமறுதலைப் புறநானூறு;

ஐயோ எனின்யான் புலியஞ்சுவனே
அணைத்தனன் கொளினே அகன்மார் பெடுக்க வல்லேன்

எனப் படம் பிடித்துக் காட்டுகின்றது.

இத்தகைய அச்சம் தரும் வாழ்வினைத் தரும் புலி, கரடி, பன்றி யானை போன்ற விலங்குகளை அழித்துத் தம்மைக் காக்கும் பெரும் மறவர்கள் கண்ணிற்படாது தம்மைக் காக்கும் கடவுளர்க் கொப்பான காணும் தெய்வங்களாகக் கருதப்பட்டனர். தம் இன்னுயிரைக் கருதாது பிற மக்களுயிரைக் காக்கும் இத்தெய்வ மாந்தர்கட்கு நன்றிக் கடனாக, போரில் வீரமரணமடைந்த மறவர்க்கு நடுகல் எடுப்பது போல நடுகல் எடுத்து அவர்தம் பெயரும் பீடும் எழுதி வழிபட்டு வந்தனர். இன்றும் அவை கடவுட் கோலம் கொண்டு வழிபாட்டைப் பெற்று வருகின்றன.

ஊரழிக்க வந்த விலங்குகளோடு அவற்றை அழித்துத் தம்மையும் அழித்து வீரமரணம் அடைந்த மறவர்களுக்காக எடுக்கப்பட்ட நடுகற்கள் மலையும் காடும் நிறைந்த கொங்கு நாடு, வடார்க்காடு மாவட்டம் ஆகியவற்றில் பரவலாகக் காணப்படுகின்றன.

பல்லவ அரசன் முதலாம் மகேந்திரவர்மனது 32-ஆவது ஆட்சியாண்டில் (கி.பி. 622) வடார்க்காடு மாவட்டம் செங்கம் வட்டத்திலுள்ள மோத்தக்கல் என்னும் ஊரில் பொன் மோதனர் என்பவரது சேவகன் வின்றன் வடுகன் என்பவன் புலி குத்திப் பட்டான். அவன் புலியோடு பொருதுகின்ற காட்சி அழியா இடம் பெற்று வழிபாட்டில் உள்ளது.

தருமபுரி மாவட்டம் ஊத்தங்கரை வட்டத்திலுள்ள தட்டக்கல் என்னும் ஊரில் புலியுடன் போரிடுவது போன்று ஒரு நடுகல் உள்ளது. இது போசள அரசன் வீரராமனாதனின் 37-ஆவது ஆட்சியாண்டில் பொறிக்கப்பட்டது. துவற பள்ளியில் வென்னரன் விக்கிரம சோழ நாட்டு நாயகஞ் செய்த தித்தாழ்வானுடைய மகன் ஆளைக் கடிக்க வந்த புலியை வளைந்து குத்தி இறந்து பட்டான். ஆளைக்கடிக்கையிலே வளைஞ்சு குத்தினன் புலியை என்பதனல் புலியால் அடிக்கடி மக்களுக் கேற்பட்ட துன்பமும் அவர்களைக் காத்தானுக்குக் கொடுக்கப்பட்ட கடவுள் மதிப்பும் அறியப்படுகிறது.

இதே போசள அரசன் காலத்தில் கடத்தூர் நாட்டை நாயகம் செய்யும் ஆரோதான் இருகன் பெருமாள் மகன் ஆண்பிளைப் பெருமாள்

புலியைக் கொன்று விரசுவர்க்கம் பெற்றதை ஒரு நடுகல் குறிக்கிறது. இதுபோன்று எழுத்தோடும், எழுத்தின்றியும் பல நடுகற்கள் கிடைத்துள்ளன.

மேற் காட்டப்பட்ட நடுகற்களின் சொற்களிலிருந்து புலி குத்தி இறந்து பட்டவர்களெல்லாம் பேரரசர்களின் கீழ் குறு நிலத்தலைவர் களாக ஆண்டு வந்தவர்களின் மக்களாகவோ அடியார்களாகவோ காணப்படுகின்றனர். இதனால் விலங்கச்சத்தின் பிடியிலிருந்து அப் பகுதி மக்களை மீட்பது ஆளும் தலைவர்களது பெருங்கடன் எனத் தெரிகின்றது.

ஊரழிக்கவும் ஆளைக்கடிக்கவும் வந்த புலியைக்கொன்று பட்டது போன்றே காட்டுப் பன்றியைக் குத்திப் பலர் இறந்துள்ளனர். நாம் எளிமையாக நினைக்கும் பன்றி மற்றைய எல்லா விலங்குகளையும் விட அறிவு நுட்பமும், வலிமையும், கொடுமையும் வாய்ந்தது என்பதைச் சங்க நூற்களும், மேலை நாட்டு விலங்குபற்றிய நூல்களும் பலபடப் பேசுகின்றன. வேட்டை நூலாரின் கூற்றுக்கள் பல நமக்கே அச்சந் தருவனவாக அமைந்துவுளன.

கி.பி. 9, 10-ஆம் நூற்றாண்டில் ஊத்தங்கரைப் பகுதியில் ஆட்சி செலுத்தி வந்த அய்யப்ப தேவனின் கீழ் வேணாட்டை இருசப்பையனார் என்பவர் ஆண்டு வந்தார். அக்கால் ஊருக்குள் புகுந்து தொல்லை விளைத்த பன்றியை அவரது அடியான் அரைய குட்டி என்பவன் குத்திக் கொன்று, தானும் பட்டான். அதே போன்று சோழ அரசன் முதலாம் இராசேந்திரனின் காலத்தில் கங்க நாட்டு புல்லமங் கலத்தைச் சேர்ந்த பாண்டிக் காமுண்டர்பள்ளியில் மாச்ச காமுண்டன் மகன் விச்சிக் காமுண்டன் பன்றியைக் குத்தி இறந்து பட்டான். கி.பி. 13, 14-ஆம் நூற்றாண்டில் வீரன் ஒருவன் ஊர் மக்களுக்குத் தொல்லை கொடுக்கும் பன்றியை வேட்டையாடிக் கொன்று தானும் பட்டான். அவனுக்கு அவன் மக்கள் நினைவுக்கல் எடுத்ததைத் தேன்கனிக்கோட்டை வட்டம் உச்சினப் பள்ளியில் கிடைத்த கல்வெட்டு எடுத்தியம்புகின்றது.

காடுகளிலிருந்து யானைகள் ஊர்ப்புறங்களில் புகுந்து தொல்லை கொடுப்பது இயல்பு. இக்காலத்திலும் அத்தகைய நிகழ்ச்சிகள் நடந்துள்ளன. அக்காலத்திலும் அதுபோன்ற தொல்லைகளால் மக்கள் துன்புற்றுள்ளனர். அத்தகைய யானைகளோடு போரிட்டு உயிர் துறந்தோர் பலர். அவர்களுக்காக எடுக்கப்பட்ட நடுகற்கள் அவற்றைக் கூறு நிற்கின்றன. தேன்கனிக்கோட்டை வட்டம் சவளகிரி, இன்றும் யானைகள் வாழும் காட்டுப்பகுதி. இவ்வூருக்குத் தென்கிழக்கில் வீரன் ஒருவன் யானையோடு பொருதுகின்ற காட்சியுடைய எழுத்தில்லா நடு கல் ஒன்றுள்ளது. எழுத்தில்லாவிடினும் ஊரையழிக்க வந்த யானையை எதிர்த்த வீரனுக்கெடுக்கப்பட்டதே இது என்பதில் சிறிதும் ஐயமில்லை. கோவை மாவட்டம் முட்டம் என்ற இடத்தில் யானைப்போர் நடுகல் ஒன்று உள்ளது. இவை யானைகளின் துன்பத்தினின்று சமூகத்தைக் காத்தத் தன்னலமற்ற மக்களுக்கெடுக்கப்பட்டவையே.

# பாண்டிய நாட்டில் நீர்ப்பாசனப் பணிகள்

வெ. வேதாசலம்
அருங்காட்சியகக் காப்பாளர்
மதுரை

V

### பணிகள்

பாண்டிய நாட்டில் வாழ்ந்த பேரரசர்கள், குறுநில மன்னர்கள் அரசியல் அதிகாரிகள், சமூகத்தில் உயர்ந்த நிலையைப் பெற்றிருந்தவர் கள், தனி நபர்கள், கிராமச் சபையினர் ஆகியோர் பல்வேறு விதமான பாசனப் பணிகளைச் செய்வித்திருப்பதைக் கல்வெட்டுக்கள் நமக்குத் தெரிவிக்கின்றன. பேராறுகள் நெறியாக ஓடும்படி அவற்றின் இரு மருங்கும் உயர்ந்த கரைகள் எழுப்பப் பெற்றன. பேராறுகள் பிரிக்கப் பட்டு சிறிய ஆறுகள் உண்டாக்கப்பட்டு அவை நீரற்ற நிலங்களை நோக்கி ஓடும்படி செய்யப்பட்டன. மேலும் வாய்க்கால்கள் வெட்டப்பட்டு ஆற் றிலிருந்து பாசனத்திற்காக நீர் பிரிக்கப்பட்டது. அவற்றின் இடையில் மதகு வைத்து குளங்களுக்கும், ஏரிகளுக்கும் கொண்டு செல்லப்பட்டது புதிதாக ஏரிகள், குளங்கள், தோண்டப் பெற்று அவற்றில் மடைகள் வைக்கப்பெற்றன. பழைய குளங்கள், ஏரிகள் ஆகியவற்றின் கரைகள் உயர்த்தப் பெற்றன. உட்புறம் ஆழ்படுத்தப்பட்டது அவற்றின் மடைகள் சிதைந்தபோது புதுப்பிக்கப்பட்டன. கரைகள் அழிந்த போது புதிதாகக் கரைகள் எழுப்பப் பெற்றன வாய்க்கால்கள் தூர்ந்த போது அவை சீர்படுத்தப்பட்டன. பெருமழையாலும் பெருவெள்ளத் தாலும் ஏரிகள், குளங்கள் உடைந்தபோது உடைப்புகள் அடைக்கப் பட்டன. வயல்களுக்கு இடையே கிணறுகள் தோண்டப் பெற்று அவற்றிலிருந்தும் பாசனத்திற்கு நீர் எடுத்துக் கொள்ளப்பட்டது. ஆற்றின் குறுக்கே அணை கட்டி நீர் தேக்கப் பெற்றுப் பாசனத்திற்குப் பயன்படுத்தப்பட்டது.

### நீர்ப்பாசனச் சொற்கள்

ஆறுகள் பேராறு, சிற்றாறு என்று பிரிக்கப்பட்டன. எப்போ தாவது நீர் ஓடிவரும் பகுதி ஓடை எனப்பட்டது. நீர்நிலைகள், ஏரி, குளம், கிணறு என்று பெயர் பெற்று விளங்கின. இவற்றில் பெரிய வற்றைப் பேரேரி, பெருங்குளம் என்று அழைத்தனர். நீர் ஓடும் சிறிய வழிகளைக் கால், வாய்க்கால், சிறுகால், பெருங்கால், நீர்கோள், கண்ணாறு என்று வேறுபடுத்தினர். ஏரிகள் உடைந்து போகாமல் அதிகமாகப் பெருகிய நீர் வழிந்தோடிவிட அமைக்கப்பட்ட வழி கலிங்கு எனப்பட்டது. பாசனத்திற்காக ஏரியிலிருந்து நீர் வெளியேற மடைகள் அமைக்கப்பட்டன. அவற்றின் உறுப்புக்களாகக் குளவாய்

குமிழ், இற்பணம்பு போன்ற பெயர்களும் கல்வெட்டில் குறிக்கப் பட்டுள்ளன. மதகு என்பது வாய்க்கால், சிறிய ஆறு ஆகியவற்றில் நீரைத் தடுத்துப்பிரிக்க அமைக்கப்பட்ட அடைப்பாக குறிப்பிடப் பட்டுள்ளது. இவற்றையெல்லாம் எப்படி அக்காலத்திலிருந்தவர்கள் செய்தார்கள், அவற்றைச் செய்வித்தவர்கள் யார், அதற்கான பொருளை யும் உழைப்பையும் அவர்கள் எங்கிருந்து பெற்றூர்கள், நீர்பாசன நிர்வாகம் எவ்வண்ணம் நடைபெற்றது என்பதை இனி எடுத்துக் காட்டுக்கள் கொண்டு காணலாம்.

ஏரி அமைத்தல்

இருப்பைக்குடியிலுள்ள ஒன்பதாம் நூற்ருண்டுக்கல்வெட்டுக் கள் ஏரிகள் எப்படி அமைக்கப்பட்டன, புதுப்பிக்கப்பட்டன என்பதை நமக்கு நன்கு தெரிவிக்கின்றன. முதலில் ஏரி அதிக நீரை கொள்ளும் படி ஆழப்படுத்தப்பட்டது. பின்பு பழைய கரைகள் அழிக்கப் பெற்று அவற்றின் அடியில் கருங்கற்கள் பரப்பப் பெற்றன. அதன் மேல் புதிதாகக் கரைகள் உயர்த்தப் பெற்றன. கரைகள் செவ்வனே அமைய நூல் பிடித்து அவற்றை அமைத்தனர். இதனை 'ஏர் நூலிட்டு ஏறுவித்தல்' என்று கல்வெட்டு குறிப்பிடுகின்றது. மடைகள் கருங்கற் கொண்டும் செங்கற் கொண்டும் அமைக்கப்பட்டன.[1]

நீர் நிலைகளில் பெயர்கள்

பாண்டிய நாட்டுக் கல்வெட்டுக்களில் ஆறுகள், வாய்க்கால்கள், ஏரிகள், குளங்கள், கிணறுகள் முதலியவற்றின் பெயர் குறிக்கப் பட்டுள்ளன. அவற்றை உண்டாக்கியோர், திருத்தியோர் பெயரிலும் அவை பெயர் பெற்று விளங்கியிருக்கின்றன. தேனுறு, வைகை, தண்பொருந்தம், நட்டாறு, குண்டாறு, வெள்ளாறு, சுருளியாறு போன்ற ஆறுகளின் பெயர்கள் கல்வெட்டுக்களில் அடிக்கடி குறிக்கப் பெறுகின்றன வீரபாண்டியன் பாலாறு, பராக்கிரம பாண்டியப் பேராறு, ஸ்ரீவல்லவப்பேராறு, வாசுதேவப்பேராறு, வீரகேரளன் பிலாறு, முடிகொண்ட சோழப்பேராறு. தியாகஞ்சிறியான் பேராறு என ஆறுகள் அரசர்களது பெயர்கள், அவர்களது பட்டங்கள், அரசியல் அதிகாரிகளின் பெயர்கள் ஆகியவற்றைப் பெற்றிருந்தன

பராக்கிரம பாண்டியன் கால், அரிகேசரி வாய்க்கால், திரு நாராயண வாய்க்கால், சேரன்மாதேவி வாய்க்கால், இராசேந்திரசோழ வாய்க்கால், பரமேஸ்வர வாய்க்கால், இராமதேவ வாய்க்கால், ஸ்ரீகண்ட வாய்க்கால் என நீரோடும் வழிகளும் அப்பெயர்களைப் பெற்று விளங்கின.

ஏரிகள், மாறனேரி, திருநாராயண ஏரி, பராந்தகப்பேரேரி, வீர நாராயணன் ஏரி, சுந்தர பாண்டியன் பேரேரி, குலசேகரப் பேரேரி, முடிகொண்ட சோழப்பேரேரி, கிழவனேரி, கலியனேரி, மனேன்மயன் ஏரி, பரமேஸ்வர பேரேரி, உமைபங்கன் ஏரி, சேகரனேரி, குடிநடை ஏரி, புகழ்மலி ஏரி, புகழ்நெரி நடை ஏரி என்று பெயர் பெற்று விளங்கின.

குளங்கள் இராசசிங்கப்பெருங்குளம், கெங்கை கொண்ட சோழபதி குளம், அரங்குளம், நடையாட்டிக்குளம், தண்மாணிக்கக்குளம், மாடக் குளம் என்று பல பெயர்கள் கொண்டு அழைக்கப்பெற்றிருக்கின்றன.

### நீர்பாசனப் பணிகள் செய்வித்தோர்

*அரசர்கள்:* பாண்டிய மன்னன் சேந்தன் செழியனுக்குப் பின்னர் ஆண்டவன் மாறவர்மன் அரிகேசரி (கி.பி. 650-700). அவன் வைகை ஆற்றிலிருந்து பாசனத்திற்கு நீரைப்பிரிப்பதற்காக அவ்வாற்றிலிருந்து ஒரு வாய்க்கால் வெட்டினான். அதற்கு 'அரிகேசரி' என தன் பெயரிட்டான். அவ்வாய்க்கால் இடையே மதகு ஒன்று அமைத்து நிலங்களுக்கு நீரை நெறிப்படுத்தி விட்டான்.[2]

முகவை மாவட்டத்து சாத்தூரிலிருந்த பெருங்குளம், புதுக்குளம் என்ற இருகுளங்களில் ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபன் (கி.பி 815-862) மடைகள் அமைத்திருக்கின்றதைச் சாத்தூர் கல்வெட்டு ஒன்று தெரிவிக்கின்றது[3]. சங்கரன் கோயில் வட்டத்தில் பராந்தகவீரநாராயணன் பெயரால் ஏரி ஒன்று இருந்திருக்கின்றது. அது 'வீரநாராயணன்' என்று பெயர் பெற்று விளங்கியது.[4]

நாங்குனேரி வட்டத்தில் விஜயநாராயணம் என்ற ஊர் உள்ளது. இவ்வூரில் முற்காலப் பாண்டியர் காலத்தில் மனோன்மயன் என்பவனால் 'மனோன்மயன் ஏரி' என்ற பெயரில் ஏரி ஒன்று எடுக்கப்பட்டது. கி.பி. 1103-இல் மாசி மாதத்தில் பெய்த பெருமழையில் இவ்வேரியும் நீர் பாய்கின்ற காலும் முப்பத்திரண்டு இடங்களில் உடைப்பு கண்டு உடைப்புகள் அடைக்கப்பெறாது கிடந்தது. வேணாட்டில் பாண்டிய மன்னனுக்குக் கீழ் ஆட்சிபுரிந்த வேணாட்டு அரசர் இரவி கோதை பன்மர் இக்காலிலும், குளத்திலும் ஏற்பட்டுள்ள உடைப்புகளை அடைக்கச்செய்தார். அதை அவருக்காக அவ்வூரில் முதலித்தரம் செய்த துருத்தி மங்கலத்து நம்பிசங்கரன் வாசுதேவன் என்பவன் செய்து முடித்தான். அந்நாள் முதல் அவ்வேரியில் உடைப்பு கண்டு அடைக்கப்பட்ட கரை வாசுதேவப்பெருங்கரை என்றும், அவ்வேரிக்கு நீர்கொண்டுவரப்பெற்ற கால் வாசுதேவப்பேராறு என்றும் பெயர்பெற்றன. இப்பணி செய்து முடிக்க அவ்வூரைச் சார்ந்த சபையார் முக்காணி அரைக்காணி நிலம் விற்றுக்கொடுத்தனர். இந்நிலத்தைப் பற்றி நின்று பாசனம் செய்கின்றவன் 'மழைஇருபூவுக்கு' நாற்கல நெல் கொடுக்க வேண்டும் என்ற ஏற்பாடும் செய்யப்பட்டது. ஆண்டுதோறும் வரும் இவ்வருமானத்தைக் கொண்டு இவ்வேரி பராமரிக்கப்பட்டு வந்தது.[5]

பதிமூன்றாம் நூற்றாண்டில் பாண்டிய நாட்டை ஆட்சிபுரிந்த பாண்டிய மன்னர்களில் பராக்கிரம பாண்டியனும் ஒருவன் ஆவான். நிலக்கோட்டை வட்டத்திலுள்ள குருவித்துறைப் பகுதியில் இவன் பெயரால் வைகை ஆற்றிலிருந்து பிரிக்கப்பட்ட ஆறு 'பராக்கிரம பாண்டியன் பேராறு' என்று பெயர் பெற்று விளங்கியது. இம்மன்னனால் கருங்கற்கள் கொண்டு கட்டப்பட்ட அணை ஒன்றும் 'பராக்கிரமபாண்டியன் கல்லணை' என்று பெயர் பெற்றுவிளங்கியது.[6]

எட்டி சாத்தன் என்பவன் பாண்டிய மன்னன் ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபன் (கி.பி. 815-862) காலத்திலும் இரண்டாம் வரகுணன் (862-880) காலத்திலும் சாத்தூர்ப் பகுதிகளை, இருக்கன் குடியைத் தலை நகராகக் கொண்டு ஆண்டவன். இருப்பைக்குடிகிழவன் என்று பெயர் பெற்றவன். பாண்டியரது அரசியல் அதிகாரியாகவும் விளங்கியவன். இவன் ஆண்ட இப்பகுதி இருஞ்சோணாடு என்றழைக்கப்பட்டது இந் நாட்டில் இவன் செய்த நீர்ப்பாசனப் பணிகள் பல. இவன் குளங்கள் போன்று பாழாய்க் கிடக்கும் பள்ளப் பகுதிகளில் கரை கட்டிப புதிதாக ஏரி அமைத்திருக்கின்றான். பழங்குளங்களை ஆழப்படுத்தி கரைகளை உயர்த்தி அவற்றில் மடைகள் வைத்திருக்கின்றான். பெரிய குளங்களது பழங்கரைகளை இடித்து உயர்ந்த நீண்ட கரைகளை அமைத்திருக்கிறான். பழைய மடைகளைப் புதுப்பித்திருக்கின்றான். தென் வெளியன்குடி, கும்மணமங்கலம் என்ற ஊர்களில் இவன் தனது பெயரால் கிழவனேரி என்று இரண்டு ஏரிகளை அமைத்தான்.[7] இருக்கன் குடியில் 'திருமால் ஏரி' என்ற ஒன்றையும் கொழுவூரில் தன் மன்னன் பெயரால் 'மாறனேரி' என்ற ஒன்றையும் 'புகழ்மலி ஏரி' 'புகழ்நெறிகடைஏரி' என்ற பெயர்களில் இரண்டு ஏரிகளையும் தோற்றுவித்தான்.[8] தன் மன்னன் அமைத்த சிரிவல்லபமங்கலம் (கங்கைக் கொண்டான்) செழிக்க 'திருநாராயணன்' என்ற பெயரில் ஏரி ஒன்றை 'ஏர் நூலிட்டு ஏறுவித்து' அதற்கு குளவாயோடு மடையும் அமைத்தான்.[9]

இவனே கொழுவூரில் அரசங்குளம், செங்குளம் என்ற இரு குளங்களைத் திருத்தினான். அரசங்குளத்தைத் திருத்தி கிழவனேரி என்று பெயரிட்டான்.[10] ஆலங்குடிப் பெருங்குளத்தைத் திருத்தி அதற்கு 'குளவாயோடு மடையும்' அமைத்தான[11] இக்கிழவன் இருஞ் சோணாட்டில் இருந்த பழமையான பெருங் குளங்களை விரிவுபடுத்தி அதற்கு நீண்ட நெடுங்கரைகளை அமைத்தான். அவற்றில் மடைகள் வைத்தான். நீண்ட புதுக் கரைகள் ஓடிக் கிடந்த அக்குளங்கள் அதன் பிறகு கிழவனேரி என்று பெயர் பெற்று விளங்கியது இருஞ் சோணாட்டு மாறனூரில் இருந்த பெருங்குளமும்[12] இருப்பைக்குடியில் இருந்த வள்ளைக்குளமும்[13] நென்மலிப் பெருங்குளமும்[14] திருத்திக் கரை யேற்றப் பெற்று 'கிழவனேரி' என்று பெயரும் பெற்றன. சாத்தூரில் இருந்த பெருங்குளம் புதுக்குளம் என்ற இருகுளங்களில் ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபன் மடைகள் அமைத்தான் என்று முன்னர் கூறப்பட்டது. இவை காலப் போக்கில் சிதைந்து விட்டன. இவ்விருப்பைக்குடிகிழவன் இம்மடைகளைக் கருங்கற் கொண்டும் செங்கற் கொண்டும் திருத்தி அமைத்தான்.[16]

### அரசியல் அதிகாரிகள்

இரண்டாம் வரகுணன் சோழ நாட்டு 'இடவை' நகரத்தின் மீது படையெடுத்துச் சென்ற போது 'நக்கம் புள்ளன்' என்ற படைத் தலைவனும் அவனுடன் சென்றான். போர் முடிந்ததும் பாண்டிய நாடு திரும்பி இன்று திண்டுக்கல் வட்டத்திலுள்ள இராமநாதபுரத்தில் 'புள்ளனேரி' என்று ஓர் ஏரியைப் புதிதாக உண்டாக்கி அதற்கு 'கற்கோதி குமிழ்' செய்விக்கத் துவங்கினான். இப்பணி நடந்து

கொண்டிருக்கும் போது இவன் இறந்து விடவே இவன் மகன் 'புள்ளன் நக்கன்' என்பவன் இப்பணியை முற்றுவித்தான். இப்பணியைச் செய்த தச்சர் யார் என்றும் அதற்காக அவர்களுக்குக் அளிக்கப்பட்ட ஊதியம் எவ்வளவு என்பதையும் இங்குள்ள கல்வெட்டு தெரிவிக்கின்றது. புள்ளன் நக்கன் உயிரோடு இருந்த போது இப்பணியைச் செய்தவன் தச்சன் வடுகங் கூற்றன் ஆவான். நக்கம் புள்ளன் இறந்த காலத்திலேயே இவனும் இறந்து விடவே இவன் மகன் நக்கம் புள்ளனின் மகன் புள்ளன்நக்கன் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்து இப்பணியை முற்றுவித்தான். இதனை இவன் செய்து முடிக்கப் புள்ளன் நக்கன் காணியாகக் கொடுத்த பூமி பள்ளி நாட்டிரண்டு கூற்றிலும் ஊர் குளத்துக்கீழ் தலைநீர் பாயும் ஒரொரு வயல்களாகும்.[19]

முதற் பராந்தகன் (902-956) காலத்தில் பாண்டிய நாடு சோழர்களுக்குக் கிழிருந்தது. பராந்தன் அதிகாரி சோழநாட்டுப் புறங்கரம்பை நாட்டு மருதூர் மருதூருடையான் அருணிதிக் கலியன் பாண்டிய நாட்டு நரசிங்கமங்கலத்தில் (ஆனைமலைக்கு அருகில்) ஊருடையான் குளத்தைத் திருத்தி 'கலியனேரி' என்று தன் பெயரிட்டான். இறைகாவலாக வந்த காசைக் கொண்டு இப்பணி நிறைவேற்றப்பட்டது. இதனால் நரசிங்கமங்கலத்துப் பிரமதேய நிலங்கள் நீர்பாசன வசதியைப் பெற்றன. குளம் திருத்தப்பெற்றபோது கரை நீளமாக்கப்பட்டது கரை உயர்த்தப்பெற்றது. குளத்தின் நீர் கொள்ளும் அளவு அதிகமாக அக்குளத்தில் மண் எடுக்கப்பெற்று ஆழப்படுத்தப்பட்டது. இதனை ஆனைமலைக் கல்வெட்டு 'இக்குளத்தான் வேண்டுமாறு கல்லிக் கரை நீளம் அட்டப் பெறுவதாகவும், இக்குளத்து நீர் தான் வேண்டுமளவுங் கொத்தப் பெறுவதாகவும்' என்று தெரிவிக்கின்றது.[17]

முதல் இராசராசன் (கி.பி. 985-1014) காலத்தில் கங்கைகொண்டான் கயிலாயமுடையார் கோயில் தேவதான ஊரான அரிகேசரி மங்கலத்து ஏரி உடைந்து பாழாய்க் கிடந்தது. இராசராசன் அதிகாரி' நெற்குப்பை உடையானாந அரையன் அம்பலக்கூத்தன் இதற்குக் கரைகள் கட்டுவிச்சு 'பரமேஸ்வரப்பேரேரி' என்று பெயரிட்டான். இதற்காக இவ்வூரில் இருந்த சபையாரும், கோயில் நிர்வாகத்தாரும் இரண்டு வேலி நிலத்தை அளித்திருக்கின்றனர்.[18]

கி.பி. 11-ஆம் நூற்றுண்டின் இறுதியில் சாத்தூர் வட்டத்து வேப்பிலைப்பட்டியில் இருஞ்சோணாட்டு ஊறுணி அரையன் மதுராந்தகனான கருநிலக்குடி நாடாள்வான் அங்கிருந்த ஏரியைத் திருத்தியிருக்கின்றான்.[19]

அண்டநாட்டு திருமூரைச் சார்ந்த சூரியதேவன் என்ற தேவேந்திர வல்லாள வீரதரையன் கி.பி. 1212-இல் பாண்டியநாட்டில் வாழ்ந்திருக்கிறான். இவனது ஆணைக்கிணங்க கப்பலூரைச் சார்ந்த உய்யவந்தானான மானாபரண மூவேந்தவேளான் வைகை ஆற்றில் இருந்து சிலைமானுக்கு அருகே ஒரு பெரும் வாய்க்காலை அப்பகுதி நீர்பாசனத்திற்காக வெட்டினான். அதுமுதல் அவ்வாறு 'தியாகஞ் சிறியான் பேராறு' என்று அழைக்கப்பட்டது.[20]

மதுரை மாவட்டத்துக் குன்னத்தூரில் இருந்த ஏரியில் இலுப்பைமடைக்கும், சப்பைமடைக்கும் இடையில் உடைப்பு கண்டது. அவ்வுடைப்பை மாறவர்மன் சுந்தரபாண்டியன் அதிகாரி மலைமண்டலத்து (சேரநாடு) வண்ணலைச் சேரி கண்டன் கோடை யாயின அழகியராம பல்லவரையன் அடைத்தான்.[21] இம்மன்னது மந்திரி இராமன் பல்லவராயர் கீழிரணிய முட்டத்தில் ஒரு கால்வாயைத் தோண்டியதை அழகர்மலைக் கோயில் கல்வெட்டுத் தெரிவிக்கின்றது.[22] இம்மன்னன் காலத்திலேயே (கி.பி. 1234) மதுரையிலிருந்து விருதுநகர் செல்லும் வழியில் அமைந்துள்ள கள்ளிக்குடியில் இருந்த நாற்சானி கோவிந்தன் ஏரியும், வெள்ளைக்குளமான திருமாலிருஞ்சோலைப் பேரேரி யும் கரைகள் உயர்த்தப்பெற்றுத் திருத்தப்பெற்றன.[23] மேலும் இவ் வூரிலேயே ஒரு குறிப்பிட்ட பகுதியிலிருந்த நிலங்கள் பாசனம் பெறு வதற்காக நெற்குப்பை குமாரநாராணப் பேரேரி ஆற்றிலிருந்து நீரைப்பெறுவதற்காக வாய்க்கால் ஒன்று வெட்டப்பெற்றது.[24]

தனிப்பட்டோர்

கோவில்பட்டி வட்டத்தில் கழுகுமலைக்குத் தெற்கே திருமங்கலக் குறிச்சி என்ற ஊர் உள்ளது. இவ்வூர் ஏரி பண்டு சுந்தரபாண்டியன் பேரேரி என்று பெயர்பெற்று விளங்கியது. மாறவர்மன் சுந்தர பாண்டியனின் பெயர் பெற்ற இவ்வேரியில் இரண்டு மடைகளை இருவர் இவன் காலத்தில் அமைத்திருக்கின்றனர். ஒன்றை நீலகண்டன் நீறணிஞ்சான் என்பவன் 'சாதுனலாயன்மடை' என்ற பெயரில் அமைத் தான்.[25] மற்றொன்றை மலைமண்டலத்துக் கொடியேற்றைச் சார்ந்த பொன்னிறைநாயனூர் என்பவர் 'சுந்தரபாண்டியன் பேரேரிமடை' என்ற பெயரிலும் அமைத்தான்.[26]

நாஞ்சில்நாட்டுக் கோனூடர்குளம் ஜயங்கொண்ட சோழ நல்லூர்ப் பெருவெள்ளத்தால் உடைந்து போனது. இக்குளம் விக்கிரம சோழபாண்டிய தேவர் (11-ஆம் நூற்றாண்டு) காலத்தில் கன்னியா குமரியைச் சார்ந்த வியாபாரி ஆச்சன் மாற்றிலி குமரி சிவன்கோயில் மூகமண்டபத்தில் கூடியிருந்த சபையாரிடம் கொடுத்த காசைக் கொண்டு திருத்தப்பெற்றது.[27] முற்காலப் பாண்டியர் காலத்தில் திருக்குறுங்குடியில் சேந்த சுவாமி கிரமவித்த சோமாசியார் என்ற துறவி அறக்குளம் என்ற ஒரு குளத்தைக் 'கல்லுவிச்சார்' (தோற்று வித்தார்) என்று அங்குள்ள கல்வெட்டு ஒன்று தெரிவிக்கின்றது.[28]

மதுரை மாவட்டத்திலுள்ள திருவாதவூர் திருமறைநாத சுவாமி கோயிலுக்கு வடபுறம் ஒரு பெரிய கண்மாய் உள்ளது. இது இங்குள்ள கல்வெட்டில் பூவாணை ஏரி என்று குறிப்பிடப்படுகிறது. இதற்கு குலசேகர பாண்டியன் காலத்தில் கி.பி. 14-ஆம் நூற்றாண்டு தர்மராச தேவன் மும்முடிச்சோழியான மங்கையர்க்கரசியார் என்ற மாது ஒருத்தி (அரசியல் அதிகாரிச்சி) கண்மாயின் கரை நீரால் அரித்து அழிந்து போகாமல் காக்க ஏற்பாடு செய்தாள். அதற்காகத் தன் செலவிலேயே கண்மாயின் உள்வாய்ப் கரைப்பகுதியில் கற்களைப் பதித்துப் பாவச்செய் தாள். (Stone Embankment) அந்தப் பெண்மணி செய்த அப்பணிக்காக

அவளது நிலங்களுக்கு இக்கண்மாயிலிருந்தே நீர்பாயும் சலுகை அளிக்கப்பெற்றது.[29] இன்றும் திருவாதவூர் ஏரியில் கரையின் உள் வாய்ப் பகுதியில் பழங்காலத்துக் கற்கள் பதிக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

அரசர்கள் அதிகாரிகள் தனிப்பட்டோர் செய்திருக்கின்ற நீர்ப் பாசனப் பணிகளைப் பற்றிக் குறிப்பிடும்போது ஒன்றை இங்கு குறிப் பிடுவது நல்லது. பாண்டிய நாட்டிலுள்ள கல்வெட்டுக்கள் ஊரார்க்குப் பயன்படக்கூடிய நீர்ப்பாசனப் பணிகளோடு கோயிலுக்குச் சொந்த மான நிலங்களுக்கு மட்டும் பயன்படக்கூடிய நீர்ப்பாசனப் பணிகளைப் பற்றியும் தெரிவிக்கின்றன. கோயிலுக்கு நிலங்களைத் தானமாகத் தந்தோர் அதற்கு வேண்டிய பாசன வசதிகளைச் செய்தளிப்பதைப் பல கல்வெட்டுக்கள் நமக்குக் காட்டுகின்றன.[30] அவற்றை விரிவாக இங்கு விளக்கவில்லை.

### கிராமசபை

நீர்ப்பாசனப்பணிகளில் கிராமசபைகளும் முக்கிய இடத்தை வகித்திருக்கின்றன. நீர்ப்பாசனப் பணிசெய்ய பொருளைத் தந்தோர்க் கும், அதனை நிறைவேற்றுவோர்க்கும் இடையில் நின்று அப்பணிகளை நிறைவேற்றி வைத்திருக்கின்றன.[31] இப்பணிகள் நிறைவேற பொருளைத் தந்திருக்கின்றன. தானே முன்னின்று நடத்தியும் இருக்கின்றன. சாத்தூர் வட்டத்தில் இருக்கும் ஆலங்குடியில் முதற் குலோத்துங்கன் காலத்தில் இருந்தவன் ஆலங்குடி அரையன் ஆதிச்சன் அழகிய பாண்டிய கருநிலக்குடி நாடாழ்வான் என்பவன். இவனது பணியாள் முருகன் சாத்தனுன பேரரையன் கருநிலக்குடி நாடாழ்வான் ஆவான். இவன் இவ்வூரில் ஏரியின் மடைகளையும், இருப்பைக்குடியில் இருந்த ஏரியின் மடைகளையும் முன்னின்று திருத்தினான். இதற்கு ஆகும் செல விற்காக இவ்வூர்ச் சபையார் இறையிலியாக நிலங்களை அளித்திருக் கின்றனர்.[32] இன்றைய திருமங்கலத்து வட்டத்திலுள்ள கள்ளிக் குடியில் ஊர்ச்சபையார் அக்காலத்தில் அவ்வூரில் இருந்த குலசேகரப் பேரேரியின் பழங்கரையை அழித்துப் புதுக்கரையை அமைத்திருக் கின்றனர்.[33]

### கிணறுகள்

நிலங்களுக்கு நீர்ப்பாசனமளிக்கக் கிணறுகளும் வயல்களுக் கிடையே தோண்டப்பெற்றிருக்கின்றன. தனியார் கிணறு தோண்ட விரும்பினால் ஊர்ச்சபையாரிடம் அனுமதிபெற வேண்டும் என்றும் ஊராய் இருந்தால் அரசனிடமிருந்து அனுமதிபெற வேண்டும் என்றும் விதிமுறை தமிழகத்தில் அக்காலத்து இருந்தது.[34] கல்வெட்டுக்களில் நிலங்களுக்கு எல்லை குறிப்பிடும்போது கிணறுகள் தவறாமல் குறிப் பிடப்பட்டுள்ளன.

தளவாய்புரம் செப்பேடு எப்போதும் நீர் ததும்பி நின்ற கண்ணங்கிரன் வயக்கல் கிணறு, சோமாசி வயக்கல் கிணறு, நற்சிங்க குளவளால் என்ற மூன்று கிணறுகளால் விளைந்த வயல்கள் அனைத்தை

யும் பாண்டியன் பராந்தக வீரநாராயணன் செப்பேட்டின் தமிழ் வாசகத்தைப் பாடியவனுக்கும், சிற்பத்திறன் கொண்ட மார்த்தாண்டன் என்பவனுக்கும் இறையிலியாக அளித்தான் என்று தெரிவிக்கின்றது. செப்பேட்டின் வாசகத்தைப் (பிரசஸ்தி) பாடின சிரிமாதவன் ஸ்ரீசரண சேகரனுக்கும், மகாவிளால், பெருவிளால் என்ற இரண்டு கிணறுகளால் நீர்பெற்று விளைந்த நிலத்தைத் தானமாகத் தந்தான் என்று தெரிவிக்கின்றது.[35] பாண்டியர் கல்வெட்டுக்கள் தண்ணீர் பந்தல் வைப்பதற்கும், பொதுமக்கள் பயன்படுத்துவதற்கும் கிணறுகள் தோண்டப்பட்டதைத் தெரிவிக்கின்றன.

பொருளும் உழைப்பும்

சங்கப்புலவன் ஒருவன் அரசனுக்கு வான் நோக்கி நிற்கும் புன்புலங்கள் இவ்வகிலம் முழுமையும் இருந்தாலும் அவற்றால் ஆகும் பயன் அவனுக்கு ஒன்றுமில்லை. ஆனால் நீர்நிலையைப் பெருக்கியவர் இந்நிலவுலகில் நிலைத்த இடத்தைப் பெற்றவர்கள் என்று கூறிச் சென்றுள்ளான்.[36] இதனை உணர்ந்த பாண்டிய அரசர்களும் அவர்களுக்குக் கீழ் பணி புரிந்த அதிகாரிகளும் நாட்டில் நீர்நிலையைப் பெருக்கினர். விளை நிலங்களைப் பெருக்கினர். விளைநிலங்களைப் பெற்றிருந்த மக்களிடமிருந்து அரசுக்கு வருவாயாக வரிகளை வசூலித்தனர். இவ்வரிப் பணங்களைக் கொண்டே இந்நீர்பாசனப்பணிகளை மேலும் பெருகச் செய்திருக்க வேண்டும். பாண்டிய மன்னர்கள் காலத்திலும் இதற்காக வரி விதிக்கப்பட்டிருக்கின்றது. வரி நீக்கமும் செய்யப்பட்டிருக்கின்றது. ஏரிகள், குளங்கள், கிணறுகள் முதலியவற்றால் வந்த வருமானம் இவ்வாக்கப் பணிகளுக்குப் பயன் படுத்தப்பட்டிருக்கின்றது. தனிப்பட்டோரும் அரசரும், கிராம சபைகளும் இதற்காக நேரடியாகப் பொருள் அளித்திருப்பதையும் கல்வெட்டுக்கள் காட்டுகின்றன.

சுசீந்திரம் கோயிலுக்குக் கொடையாக அளிக்கப்பட்ட குளம் ஒன்றினால் விளைந்த நிலத்திலிருந்து கடமை (வரி) வசூலிக்கப்பட்டிருக்கின்றது.[37] மாறவர்மன் சுந்தரபாண்டியனின் மந்திரியால் இரணிய முட்டத்தில் கால்வாய் ஒன்றை வெட்டுவதற்காக மேல் இரணிய முட்டத்தில் சில நிலங்களுக்கு வரி நீக்கம் செய்யப்பட்டு அது அப்பணிக்காகப் பயன்படுத்தப்பட்டது. இதனைத் ‘திருவோடைப்புறம்’ என்று கல்வெட்டு குறிப்பிடுகின்றது.[38] முத்தூற்றுக் கூற்றத்து அண்டனூர் காலிங்கராயர்க்கு அழகர் கோயிலுக்கு மலர்கள் தருவதற்கும் பாசனத்திற்கு வாய்க்கால் வெட்டுவதற்கும்[39] அவர் வாங்கிய நிலங்களுக்கு வரி நீக்கம் செய்யப்பட்டது. நிலங்களுக்கு நீரைத் தரும் வாய்க்கால்களைப் பயன்படுத்துவதற்கு ‘வாய்க்கால் பாட்டம்’ என்ற வரி வாங்கப்பட்டிருக்கின்றது.[40] உக்கிரன் கோட்டைக் கல்வெட்டு அவ்வூரில் இருந்த பராந்தகப் பேரேரியின் கரையை உயர்த்துவதற்காகவும் ஆழப்படுத்துவதற்காகவும் இயல் காட்டிஸ்வரம், அரிகேசரீஸ்வரம் உடைய நாயனார் தேவதான நிலங்களுக்கு வரி விதிக்க அரசஆணை பிறப்பிக்கப்பட்டிருப்பதைத் தெரிவிக்கின்றது.[41]

ஏரிகள், குளங்கள் முதலியவற்றில் இருந்த மீன்களைப் பிடிப்பதற்கு வரி விதிக்கப்பட்டது. இவ்வரி 'பாசிப்பாட்டம்' எனப்பட்டது. இதனைப் 'பாசிவலை' என்றும் கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன.[43] ஆண்டு தோறும் வரும் இவ்வருமானத்தைக் கொண்டு ஏரிகள் குளங்கள் பராமரிக்கப்பட்டன. உலகணி (திருமங்கல வட்டம்) குலசேகர சதுர்வேதி மங்கலத்துச் சபையார் அவ்வூரிலிருந்த ஏரியை ஆண்டு தோறும் தூர் எடுப்பதற்காகப் 'பாசிப்பாட்டம்' வாங்கினர்.[44] மதுரை மாவட்டத்துக் குன்னத்தூர் குடிகளும், மகாசனங்களும் 'பாசிவலையைக்' கொண்டு அவ்வூர் ஏரியை ஆழப்படுத்துவதென முடிவு செய்திருக்கின்றனர்.[45] பெரிய குளம் வட்டத்திலுள்ள குள்ளபுரத்து ஏரியில் வீரபாண்டியன் காலத்தில் தூர் எடுத்தவற்கு ஏரியில் மீன் பிடிப்பதற்கு வரி நீக்கம் (பாசிப்பாட்டம்) செய்யப்பட்டிருக்கின்றது.[46]

இருஞ்சோணாட்டு ஆலங்குடி ஊரவர் அந்நாட்டில் இருந்த ஏரிகள் சிலவற்றின் மடைகளைத் திருத்துவதற்காக இறையிலியாக நிலத்தினை அளித்திருக்கின்றனர்.[47] திருநெல்வேலி மாவட்டத்துச் சுத்தமல்லியான வீரவினோத சதுர்வேதி மங்கலத்தின் சார்பில் பிராமணன் ஒருவன் அவ்வூரில் இருந்த குலசேகரப் பேரேரியை ஆழப்படுத்துவதற்காக பாண்டிய மன்னன் சடாவர்மன் குலசேகரனிடம் சென்று பொருள் கேட்டு முறையிட்டான். அவன் வேண்டுகோளை ஏற்று மன்னன் அதற்காக நூறு திரமங்களை (காசுகளை) அளித்திருக்கிறான்.[48]

நீர்ப்பாசனப் பணிகளுக்கு உழைப்பைத் தந்தவர்கள் பற்றிக் கல்வெட்டுக்கள் கிடைப்பது அரிதாக உள்ளது. திண்டுக்கல் வட்டத்திலுள்ள இராமநாதபுரம் கிராமத்தில் ஒன்பதாம் நூற்றாண்டில் புள்ளனேரியை அமைத்த தச்சன் வடுகங் கூற்றனையும்[49] அவன் மகளைப் பற்றியும் அங்குள்ள கல்வெட்டு ஒன்று தெரிவிக்கின்றது.

### நிர்வாகம்

நீர்ப்பாசன நிர்வாகம் அரசனது கையிலும், கிராமசபையாரிடத்தும் இருந்தது. அரசனது ஆணை கிராமசபையாரை இவ்விசயங்களில் கட்டுப்படுத்திற்று. கிராமசபை பாசிபாட்டம், வாய்க்கால் பாட்டம் போன்றவற்றை அரசருக்காக வசூலித்தது. அதைக் கொண்டு ஏரிகளைப் பராமரிக்கவும் செய்தது. கிராம சபையாரும் நீர்பாசனப்பணிகள் மேற்கொள்வதற்கு அரசனது ஆணையை பெற வேண்டியிருந்தது. தான் செய்த பணியினை அரசனுக்குத் தெரிவிக்க வேண்டியிருந்தது. குருவித்துறை இறைவனுக்கு தொண்டை மண்டலத்து புலியூர்கோட்டத்து மாங்காட்டு நாட்டு மாங்காடு கிழவன் சித்தங்குடி மாதவனான சோழ முத்தரையன் காசு கொடுத்து இவ்வூர் சபையார் பக்கல் வைகையாற்றுக்கு வடகரையிலும், தென்கரையிலும் சில நிலங்களை விலைகொண்டு விட்டான் இது. பாண்டிய மன்னர் ஸ்ரீவல்லபதேவர் காலத்தில் விடப்பட்டது. தென்கரையிலிருந்த நிலங்களுக்குப் பராக்கிரம பாண்டியன் காலின் மேல்பக்கமிருந்த காலில் இருந்து நீர் கிடைத்தது. இக்கால் சிறிது காலத்திற்குப் பிறகு தூர்ந்து இந்நிலத்திற்கு நீர் கிடைக்காது விளைச்சல் நின்றுபோய் கோயில்

காரியம் தட்டுப்பட்டது. உடனே சோழாந்தகச் சதுர்வேதி மங்கலத்து சபையார் இதனை அரசனிடம் எடுத்துச்சொல்லி அனுமதிபெற்றுத் தூர்ந்துபோன இக்காலைத் திருத்தினர். நீர் இல்லாது கிடந்த நிலங் களுக்கு நீர் கிடைக்குமாறு செய்தனர்.[49]

ஒவ்வொரு ஊரும் எந்தயெந்த ஆறுகளால், வாய்க்கால்களால் நீர்ப்பாசனம் பெறவேண்டும். ஒவ்வொரு நிலமும் எந்தயெந்த ஏரி யிலிருந்து அல்லது குளத்திலிருந்து எக்கால் வழியே, எப்படி நீரைப் பெறுவது என்ற வரையறைகள் அக்காலத்தில் இருந்ததைக் கல் வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. விஜயநாராயண சதுர்வேதிமங்கலம் நட்டாற்றுப் போக்கால் பயனடைந்தது.[50] சுசீந்திரம் பகுதியில் இருந்த நிருபசேகர வளநல்லூர் மருதகுண வாய்க்காலால் நீரைப் பெற்றது என்று சுசீந்திரம் கல்வெட்டு தெரிவிக்கின்றது.[51] கங்கை கொண்டானுக்கு அருகிலிருந்த அரிசேகரி மங்கலம், பரமேஸ்வரப் பேரேரியால் பயனடைந்தது.[52]

வாய்க்காலிலிருந்து நீரைத்திறந்து விடுவதிலும் முறையிருந்தது. இதனைக் கிராமசபையினர் நிர்வாகம் செய்திருக்கின்றனர். சின்னம னூரில் ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபன் காலத்தில் 'ஸ்ரீகண்டவாய்க்கால்' என்ற ஒரு வாய்க்கால் இருந்தது. இவ்வாய்க்காலில் வந்த நீரை ஒழுங்கு படுத்தி நிலங்களுக்கு இவ்வூர்ச் சபையார் விட்டனர். இவ்வொழுங்கு முறையோடு கிராமசபையினரின் ஆணையும் (கைச்சம்) பொறித்திருந்த கல் ஒன்று ஸ்ரீகண்ட வாய்க்காலுக்கு அருகில் இவ்வூர்ச் சபையாரால் நாட்டப்பெற்றது. இவ்வொழுங்கு முறை தவறியவர்கள் கோயிலில் விளக்கெரிக்கும் தகுதியிழந்தவர்கள் என்றும், தண்டனைக் குரியவர்கள் என்றும் சின்னமனூர்க் கல்வெட்டு தெரிவிக்கின்றது.[53]

1 SII Vol. XIV Nos. 43, 44
2 Studies in ancient Tamil Law and Society pp.9-10
3 இருப்பைக்குடிக் கிழவன், தமிழ்நாடு மாநில வரலாற்றுக் கருத்தரங்கு மலர்
4 SII Vol. V Nos. 405, 406
5 SII Vol. XIV No. 231
6 SII Vol. XIV No. 223
7 SII Vol. XIV No. 44, வரி 15-16 ; 22-23
8 Ibid No. 44 வரி 16-20
9 Ibid. வரி 23-24
10 Ibid. No. 44 வரி 19
11 Ibid No. 44 வரி 22
12 Ibid. No. 44 வரி 16
13 S.I.I, Vol. XIV No. 42; 44; 33
14 ARE 67 of 1937
15 இருப்பைக்குடிக் கிழவன், தமிழ்நாடு மாநில வரலாற்றுக் கருத்தரங்கு மலர்
16 SII Vol. XIV No. 26
17 SII Vol. III Part III No. 106

18 SII Vol. V No. 724
19 SII Vol. XIV No. 203
20 ARE 333 of 1961
21 ARE 79 of 1928-29
22 அழகர்மலைக் கோயில் கல்வெட்டு
23 ARE 262 of 1963-64
24 Ibid
25 ARE 350 of 1965-66
26 ARE 351 of 1965-66
27 கன்னியாகுமரி மாவட்ட கல்வெட்டுக்கள்
28 SII Vol. xiv No. 19
29 ARE 497 of 1962-63
30 SII vol. xiv No. 26
31 கன்னியாகுமரி மாவட்டக் கல்வெட்டுக்கள் 1968-118
32 ARE 340 of 1929-30
33 ARE 263 of 1963-64
34 யாவருங்கேளிர் பக்கம் *151*
35 தளவாய்புரம் செப்பேடு வரி 207-220
36 புறநானூறு, 18
37 கன்னியாகுமரி மாவட்டக் கல்வெட்டுக்கள் 1968-247
38 அழகர் கோயில் கல்வெட்டு
39 Ibid
40 ARE 26 of 1909
41 ARE 201 of 1935-36
42 ARE 227 of 1964-65
43 ARE 283 of 1963-64
44 ARE 227 of 1964-65
45 ARE 149 of 1908
46 ARE 340 of 1929-30
47 ARE 459 of 1909
48 SII Vol. XIV No. 26
49 Ibid No. 236
50 Ibid No. 67
51 கன்னியாகுமரி மாவட்டக் கல்வெட்டுக்கள் 1968-212
52 SII Vol. V No. 724
53 SII Vol. XIV No. 78



தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறைக்காக ஷெ துறையின் அச்சகத்தில்,
இத்துறை இயக்குநர் டாக்டர் இரா. நாகசாமி, எம்.ஏ.,பிஎச்.டி அவர்களுக்காகப்
பதிவு அலுவலர் திரு. நடன. காசிநாதன், எம்.ஏ.. அவர்களால்
அச்சிட்டு வெளியிடப்பெற்றது.